www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஆவணி 2001 இதழ்-29

" நாங்கள் சிந்தின கண்ணீருக்கும் இரத்தத்துக்கும் பலன் கிடைச்சிருக்கு. எங்கட விடுதலை கிட்டி வருது "

-சனத்தின் குரல்-

## முன்னேறித் தாக்குவோம்

**வி**டுதலை யுத்தத்தில், எதிரியின் பிரதான அடித்தளங்கள் சிதைக்கப்பட்டாகி விட்டது. இதுவரை சமாதான மொழியில் பல தடவை அவர்களுடன் உரையாட முனைந்தும் அது அவர்களுக்குப் புரியமுடியாத ஒன்றாகி விட்டது. ஆக, ஆட்டங்கண்டு போயிருக்கும் எதிரியின் அரசு இயந்திரத்தை முன்னேறித் தாக்கி எதிரியின் அடையாளங்களை முற்றாக நம் தாயகத்திலிருந்து துடைத்தெறிவது மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. நம் தமிழீழ அமையப் போகும் சுதந்திர தேச அரசு, புத்தாயிரத்தில் பல புரட்சிகளுக்கு ஓர் உந்து சக்தியாகத் திகழட்டும்.

இதுவரை எதிர்கொண்ட எல்லாவித தடைகளையும் தகர்த்தெறிந்தது போலவே நம் தேசத்தின் இறைமையை மறுதலித்துக் கொண்டிருக்கும் ஆதிக்க சக்திகளின் அனைத்து முயற்சிகளையும் முறியடிப்போம். சர்வதேச அளவில் நமது போராட்டத்தின் நியாயத்தன்மையை இன்னும் அழுத்தமாகப் பதிப்போம். கடந்த தவறுகளில் இருந்து கற்றுக் கொண்டு, நமது



சுதந்திரக்குடியரசை தாபிப்பது நோக்கிய அடுத்த கட்டப் பணிகளை நிறைவு செய்வது நமது விடுதலைப் பயணத்தின் உடனடி வருங்காலப் பணிகளாக உள்ளது.

தேச அரசை ஸ்தாபிக்கும் பயணத்தில் தீர்மானகரமான காலகட்டமாகும் என இன்றைய கட்டத்தைத் தீர்மானித்து விட்டோம். ஒவ்வொரு கணத்தின் பெறுமதியும் ஒரு வரலாற்றைப் படைக்கவல்ல இச்சந்தர்ப்பத்தில் நமது ஒட்டுமொத்த ஆற்றல்களையும் அரசியல், போரியல், இராஜதந்திர அம்சங்களில் நமது தேசத்தைப் பலப்படுத்துவதை நோக்கி குவிப்போம். தென்னாசியாவில் அடுத்து நடவடிக்கைகளை மேலும் உயர்ந்த பண்புத் தரத்திற்கு உயர்த்துவோம். விடுதலை யுத்தத்தில் மக்கள் யுத்தப் பண்பினை விரிவுபடுத்துவோம்.

விடுவிக்கப்பட்ட விடுதலைப் பிரதேசங்களில் நமக்கான சொந்த உற்பத்தியை, சொந்த நிர்வாகத்தை, விநியோக முறைமையை பரந்துபட்ட மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி மேற்கொள்வோம். அவற்றில் மக்களின் பங்களிப்பினையும் ஆற்றலையும் ஒன்று குவிப்போம்.

தமிழீழ குடியரசை நோக்கிய நமது பயணத்தில் மக்களின் சிந்தனைத் தளத்தை

(தொடர்ச்சி 8ல்)

## வந்தாறுமூலையின் வித்துக்கள்!

11வருடங்கள் கடந்துவிட்டன. . . அந்த 158பேரும் தேசத்தின் பெயரால் தம்முயிரை அர்ப்பணித்து.

ஆம்! 1990 புரட்டாதி 05ம் திகதி ஆக்கிரமிப்பு படைகளின் கொலை வெறிக்கு வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் அகதிகளாயிருந்த மக்கள் பலியாகி 11 வருடங்கள் ஆகிவிட்டன. ஈழத்தமிழராய் தமதடையாளத்தைக் கொண்டிருந்ததன் காரணமாக புதையுண்டு போன நம் மக்களை, தேச விடுதலைக்கு உரமாகிப் போன நம்மவர்களை நினைவுகூர்வோம். நம் தேச இருப்பை வேரறுக்கும் எதிரிகளை நம்மண்ணிலிருந்து தடையமற்று துடைத்தெறிவோமென உறுதியேற்போம். இதுவே தேசத்தின் தியாகிகளுக்கு நாம் செலுத்தும் உயரிய அஞ்சலியாகும்.

## கோணேஸ்வரிக்கு தேசத்தின் உயரிய அஞ்சலி!

**19**97 ஆவணி 21ம் திகதி தென் தமிழீழத்தில் சிங்கள படையினரால் கூட்டு வன்புணர்ச்சிக்கு இலக்காக்கப்பட்டு குரூரமாக படுகொலை செய்யப்பட்ட நம் தேசத்துப் பெண் கோணேஸ்வரியின் நினைவு தினத்தில் அக்குற்றத்திற்கு காரணமானவர்களுக்கு தண்டனையளிக்கும் விதமாகவும், ஆக்கிரமிப்புப் படைகளை தென் தமிழீழத்தில் இருந்து வெளியேற்றுவதன் ஒரு பகுதியாகவும் அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

நம் தேசத்துப் பெண்களுக்கு எதிரிகள் இழைக்கும் பயங்கரத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, நமது சகோதரியை நினைவு கூரும் விதமாக, இராணுவத் தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பது நமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும்.

நமது பெண்களின் மீது எதிரிகள் மேற்கொள்ளும் வன்முறைக்கு நமது தேசத்தினால் எதிரிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். நமது பெண்களுக்காக நமது மக்கள் அனைவரும் தேசமாகத் திரண்டு நிற்கின்றனர் எனும் உணர்வில், தாம் தண்டிக்கப் படுவோம் எனும் அச்சத்தில் எதிரிகள் தமது அட்டூழியங்களை நிறுத்திக் கொள்ளுமளவுக்கு நமது எதிர்ப்பு அமைந்திட வேண்டும்.

நமது பெண்கள் மீது அண்மைக் காலங்களில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நம் மக்கள் மத்தியிலிருந்து வெளிப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் எதிரியின் ஆணாதிக்க வன்முறைக்கு எதிரான அரசியல் விழிப்புணர்வை சர்வதேச அளவில் உருவாக்கியிருக்கும் நிலையில், விடுதலை புலிகளின் மேற்படி இராணுவ நடவடிக்கையானது அந்த அரசியலை மேலும் வலுப்படுத்துவதாக, பெண்களின் மீதான வன்முறைக்கு எதிரான போராட்டத்திற்கு உலக அளவில் புதிய வெளிச்சத்தை பாய்ச்சுவதாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக பெண்கள் படையணி நமது தேசத்தின் பெண்களுக்காக எதிரிகளுக்கு தண்டனையளிப்பது என்பது தமிழீழ பெண்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்வாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 83 ஆடி விதைப்பு — 2001 ஆடி அறுப்பு

'வி'னைவிதைப்பவர் வினையறுப்பர்" இப்படியொரு பழமொழியுண்டு. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் அதே போன்ற சமமான மறுதாக்கம் உண்டு". விஞ்ஞான தொடக்க யுகத்தின் மொழியாடல் இது. இதனை இன்னும் வளர்த்தெடுத்ததாக அரசியல் இயங்கியல் மொழியில், "ஒரு முரண்பாட்டின் தீர்விற்கான வித்து அம் முரண்பாட்டிற்குள்ளேயே தோன்றி வளர்ச்சி பெற்று வருகின்றது"... என்பர்.

வரலாற்று ரீதியிலும் சமூக அளவிலும் தனித்துவமும் இனத்துவமும் கொண்டிருந்த ஈழத்தமிழரின் இருப்பினையும் அதன் அரசியலையும் கருவறுத்திட பல தசாப்தங்களாக செயற்பட்டு வரும் சிங்கள இனவாதத்தினால் ஏற்பட்ட அழிவுகள் நாமறிந்ததுதான். அரசியல் பிரதிநிதித்துவப் பறிப்பு, மொழி அடக்குமுறை, நில ஆக்கிரமிப்பு, கலாச்சார அடக்குமுறைகள், வேலை வாய்ப்புகள் பறிப்பு, கல்வியில் பாகுபாடு என நீளும் அடக்குமுறைகளுக்கு அத்திவாரமாக சிங்கள இனவாத அரசியல் யாப்பின் கீழ் அமைந்த ஓர் கொடிய அடக்குமுறை ஆட்சி முறைமை. இப்படியாக எந்தவொரு தளத்தினையும் சிங்கள இனவாதம் விட்டு வைத்ததில்லை.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிரான நீண்ட விட்டுக் கொடாத போராட்டங்களினூடாக சிதறிக்கிடந்த ஈழத்தமிழர் ஒரு தனியான அரசியல் வகையினமாக, வலுவான தேசமாக திடம்பெற்றனர். அனைத்து சமூகப் பிரிவினரும் வர்க்கப் பிரிவினரும் விடுதலைப் போராட்டத்தின் பிரிக்க முடியா கூறுகளாயினர். தமிழ் மக்களின் சிறுபிரிவினர் வசம் இருந்து வந்த அரசியலானது, அடக்கப்படும் - விளிம்பு நிலை மக்கள் பிரிவினரும் பரந்துபட்ட தமிழ் மக்களும் அன்றாடம் பங்குபற்றும் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. மக்கள் வீதியில் இறங்கி தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் முத்திரைகளைப் பதித்து வருகின்றனர். இந்த படிமுறை வளர்ச்சிக்கான மூலக்கூறுகளானது சிங்கள சோவினிசத்தின் அடக்குமுறை முரண்பாட்டினுள்ளேயே புதைந்து கிடந்ததை அடக்குமுறையாளர்களே உணர்ந்திருக்கவில்லை.

"முதலாளித்துவம் தனக்கான சவக்குழியை தானே தோண்டிக் கொள்கின்றது" இது கார்ல் மார்க்சின் வாக்கு. எந்தவொரு இனவாதமும் கூட தனக்குரிய புதைகுழியை தானே தயார் செய்து கொள்கின்றது என்பது இன்று எம்கண் முன்னுள்ள யதார்த்தம்.

சிங்கள இனவாதம் பல்வேறு வடிவிலான தேசிய அடக்குமுறைகளுக்கூடாக, தன்னளவில் இறுதி ஈற்றில் இனப்படுகொலை மற்றும் பொருளாதார நிர்மூலம் என உச்சவடிவத்திற்குள் 1983 ஆடியில் பாய்ச்சல் கண்டது. சிறிலங்காவின் தலைநகரில் தொடங்கி, சிறிலங்காவின் துணை நகரங்கள் என இப்போக்கு விரிவடைந்தது. நமது தாயகத்திலும் கூட, சிங்களவர் செறிவாக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள நகரங்கள், கிராமங்கள் எங்கும் சிங்கள இனவாதத்தின் சுவடுகள் நீட்சியடைந்தது. ஈழத்தமிழர் தமது அரசியல் தலைவிதி என்பது சுதந்திர தமிழீழக் குடியரசுதான் என்பதை ஐயந்திரிபற உறுதியேற்கும் உட்கூறினை தமது இந்த இனஅழிப்பு நடவடிக்கை உள்ளார்ந்து கொண்டிருந்ததையும் இந்த இனவாதிகள் உணர்ந்திருக்கவில்லை.

இனஅழிப்பில் ஈடுபட்ட சிங்கள அரசு, மேலும் ஈழத்தமிழரின் எண்ணிக்கைப் பலத்தைக் குறைத்துவிட, 83 இனப்படுகொலைக் காலத்திலேயே அவர்களின் குடியகல்வினை ஊக்குவித்தது. துரிதப்படுத்தியது. இதன் மூலமாக தமிழ்த் தேசிய இருப்பினை அறவே இல்லாதொழித்து தீவு முழுவதையும் சிங்கள மயமாக்கி விடலாம் என அவர்களின் சாணக்கிய மூளைகள் கணக்குப் போட்டன. அவ்வாறு புலம்பெயர்ந்த நமது மக்களின் கணிசமான பங்களிப்பே சிங்கள அரசினையும் அதன் ஆயுதப்படைகளையும் தகர்ப்பதற்கான வளங்களை வற்றாது அள்ளிக்கொடுக்கும் என அவர்கள் அப்போது உணர்ந்திருக்கவில்லை.

நிலவும் சிறிலங்கா அரசிற்குள் தமக்கு இடமே இல்லை என்பது தொடர்ந்து நடைபெற்ற சுத்திகரிப்பில் ஈழத் தமிழர்களுக்கு மேலும் உறுதி செய்யப்பட்டது. ஆயுதப்படைகள், பொலீஸ் படைகளில் தமிழ்ச் சுத்திகரிப்பு, அரசு இயந்திரத்தின் முக்கிய பொறுப்புகளில் இருந்தும் நிர்வாகங்களில் இருந்தும் அப்பட்டமான சுத்திகரிப்பு என்பது சர்வசாதாரணமான விடயமாகியது.

இங்கும் இனவாதம் உருவாக்கிய பகை முரணுக்குள் அதற்கே எதிரான வித்து மையங் கொண்டிருந்ததை பார்க்கின்றோம். இந்த முரண்பாட்டிற்குள் அதனைத் தகர்க்கும் கூறும் தோன்றி வளர்ந்து கொண்டிருந்தது. சோவினிசத்தின் புதிய போக்கின் காரணமாக, தமிழீழக் குடியரசு நோக்கி ஈழத்தமிழர் அனைவரையும் தமது நடவடிக்கைகள் உந்துவதை இனவாதம் உணர்ந்து கொள்ளவில்லை. எந்தவொன்றை - தமிழீழத்தை- அழித்து எந்தவொன்றை - சிங்கள அரசினை- நிலைநிறுத்த சிங்கள இனவாதம் படாதபாடு பட்டதோ அந்த ஒன்றின் தகர்விற்கான தயாரிப்புக்களை தானே செய்து கொடுத்துக் கொண்டிருப்பதையும் உணர்ந்து கொள்ளவில்லை.

முப்படைகளில் இருந்தும் பொலிஸ் படையில் இருந்தும் தமிழர் களையெடுக்கப்பட்டதானது, பதிலாக அத் தேசம் தனக்கான முப்படைகளையும் பொலிஸ் படைகளையும் உருவாக்க வழி திறந்து விடப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். அதுபோலவே தமக்கான ஆட்சி முறைகளும் நிர்வாகங்களுக்குமான அத்திவாரங்களை தமிழ் தேசம் இட்டுக் கொண்டிருக்கின்றது. அதாவது தமிழீழ விடுதலைக்கான படை, தோன்றி வளர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கின்றது. தமிழீழக் குடியரசுக்கான பொருளாயத, ஆன்மீக அத்திவாரங்களும் கூட இடப்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

இப்படி எந்தத் தளத்தில் எந்தக் கோணத்தில் பார்த்தாலும், விடுதலைப் போராட்டத்தின் உந்துதலுக்கும் அதன் வெற்றிக்குமான வித்துக்களை ஊன்றியது சிங்கள இனவாதமே. 83 ஆடிப் படுகொலையும், பொருளாதார நாசமும் நமது அனைத்து மக்களையும் விடுதலையின் பால் சாரிசாரியாக அணிதிரட்டியது. இடையில் பல ஏற்ற இறக்கங்களைக் கடந்து தேசியவிடுதலை என்ற இலக்கில் காட்டாற்று வெள்ளமாகத் தீவிரம் பெற வைத்துள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கானது, மென் மேலும் விரிவடைந்து, சரியாக பதினெட்டு வருடங்களின் பின்பு, அதாவது, 83 ஆடிப் படுகொலை நடந்து 18 வருடங்களின் பின்பு, சிங்கள இனவாதத்தின் இருப்பை அதன் இதயத்தை, நாடிநரம்புகளைப் பிய்த்தெறிந்துள்ளது.

தாக்கினால் திரும்பி வரும் எறிவளை (Boomarang) போல, எம்மீதான எம் தேசத்தின் மீதான தாக்குதலின் விளைவுகள் அவர்களை நோக்கித் திரும்பிய அற்புத காரியம் நிகழ்ந்துள்ளது. தாம் விதைத்ததை இனவாதிகள் தாமே இப்போது அறுவடை செய்து கொண்டிருக்கின்றனர். எந்தவொரு தேசிய இருப்பை நிர்மூலம் செய்ய திட்டமிட்டு செயலாற்றப்பட்டதோ, அச்செயற்பாடே இனவாத அரசிற்கு இன்று அகலக் குழியைத் தோண்டி விட்டுள்ளது.

ஆம், அதுதான் 2001 ஆடி 24 இல் நடந்த விமானப் படைத்தள தாக்குதல். ஆம் வெற்றியின் ஒரு பரிமாணம் இது.

இதற்குமேல் மரணக்குழிக்குள் சிங்கள இனவாத அரசினை எப்போது கிடத்துவது என்பது மாத்திரமே தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது. அதுவும் விரைவில், மிக விரைவில் தீர்மானிக்கப்பட்டு விடும்.

அப்படித் தீர்மானிக்கப்படுவது இப்போது நம் தேசத்தின் வலுவான இணைப்பிலும் முன்னோக்கிய செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது.

◆ தருமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாபெரும் வரலாற்றுச் சாதனை

ஆடி 24 அதிகாலை நிகழ்ந்த அந்த சாதனை பற்றி பல்வேறு கோணங்களில், உள்ளூர் அளவிலும் உலகளவிலும் அரசியல், பொருளாதார ஆய்வாளர்களாலும் இராணுவ வல்லுனர்களாலும், அவரவர் நலன்களில் இருந்து அலசப்பட்டு விட்டது. இங்கு, நமது தமிழீழ விடுதலை நோக்கில் ஒரு கண்ணோட்டத்தைப் பெறுவதும், அடுத்து நாம் எமது இலக்கில் எதனை நோக்கி நகர வேண்டும் என்பதில் தெளிவுறுவதற்குமான ஒரு முயற்சியே இக்கட்டுரையாகும்.

ஒரே சமயத்தில் அரசியல், பொருளாதார, இராணுவ, இராஜரீகத் தளங்களில் இத்தாக்குதல் மூலம் சிறிலங்கா அரசு என்றுமில்லாத அளவிற்குப் பலமாக அடித்து வீழ்த்தப்பட்டுள்ளது. தாக்குதலின் விளைவுகள் குறித்து ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கில் புள்ளிவிவரங்கள் வந்த வண்ணமுள்ளன. அழிவின் விளிம்பில் நிற்பதாக எதிரிகள் தரப்பில் பலர் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்ளும் அளவிற்கு இத்தகர்ப்பின் கனதி உள்ளது. உடனடி அழிவுகளும், அதன் அடுத்தடுத்த விளைவுகளும், அடுத்துவரும் காலங்களில் உள்ளிருந்து அரச இயந்திரத்தை அரிக்கப்போகும் கூறுகளும் என, அனைத்தையும் தொகுத்து நோக்கும்போதுதான் விமானத்தளத்தின் மீதான தாக்குதலின் பரிமாணங்களையும், அதன் தொடர் விளைவுகளையும் தாக்குதல் நடாத்தப்பட்ட பொருத்தப்பாட்டையும் அவற்றின் தாற்பரியங்களையும் விரிந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ள முடியும்.

நிதித்தளத்தினை எடுத்துக் கொள்வோம் எனின்... மோசமான நிதித்துறைச் சிதைவில் ஏற்கனவே சிக்கியிருக்கும் சிறிலங்கா அரசினை உடனடியாகவும் நீண்ட கால அடிப்படையிலும் மீள முடியாத நிலைக்கு விமானத்தளத் தாக்குதலின் விளைவுகள் தள்ளிவிட்டுள்ளது. (பார்க்க: சிதைக்கப்பட்ட சிறிலங்காப் பொருளாதாரம்)

சிறிலங்கா அரசினது பாதுகாப்பிற்கென ஒதுக்கப்படும் நிதியானது, அரைவருடம் கழிய முன்பே துண்டுவிழத் தொடங்கிவிடுவது வழமையாகும். தற்போது இவ்வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதிக்கான வருவாய் பெருமளவு இழக்கப்பட்டிருப்பதுடன், புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் ஏராளமான புதிய நிதியொதுக்கீடுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதர விமானப்படைத் தளங்களையும் மற்றும் தெற்கில் உள்ள பல்வேறு முக்கிய இடங்களையும் அரசு விசேட பாதுகாப்பிற்குட்படுத்த வேண்டியுள்ளது. ஆக, அரசு அடுத்த வருட பட்ஜெட் சமர்ப்பிக்க முடியாத நிலையில் உள்ளது. இது அரசின் ஆட்சித் திறன் அற்றுப் போயுள்ளதற்கான திடமான அறிகுறி.

**தாக்குதலின் இராணுவ தாற்பரியம்...**

சிறிலங்காவிலேயே மிக மிக பாதுகாப்பான இடம், உயர் பாதுகாப்பு மையம் மிகவும் கச்சிதமாகத் தகர்க்கப்பட்டுள்ளது. அதாவது, பாரிய, பாரதூரமான தாக்குதல் கருவிகளை களத்திற்குள் போராளிகள் கொண்டுவந்தமை, 14-21 கெரில்லாக்கள் பங்குகொண்டமை. தாக்குதலின் பின்னர் வெளிச்சத்தில் கூட தடயங்களைப் பின்தொடர்ந்து செல்ல முடியாமை என்ற வகையில், இது அரசின் அனைத்துவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கேலிக்குள்ளாக்கியது - தமது இலக்கின் உச்சப் பூர்த்தியை எய்திய விதத்தில் தாக்குதலின் வெற்றித் திறன். தாக்குதலின் இலக்கை நிறைவேற்றுவதில் போராளிகள் அதிகபட்ச நிபுணத்துவத்துடன் செயற்பட்டமை. மேலும், இத்தாக்குதல் முற்றுமுழுதாக இராணுவ, பொருளாதார இலக்கைக் கொண்டது எனப் பார்த்தால், இராணுப் பரிமாணத்தில், இதுவரை கால வரலாற்றில் தென்னாசியாவிலும் ஆசியாவிலும் ஏன் உலகிலும் இதுவரை நடைபெற்றிராத ஒரு வரலாற்றுச் சாதனையாகும், முதற்தர கெரில்லாத் தாக்குதலாகும் என இத்தாக்குதலைப் பதிவில் கொள்வோம்.



அதிசயங்கள் அடிக்கடி வரலாற்றில் நடைபெறுவதில்லை. எல்லா இடங்களிலும் நடந்து விடுவதுமில்லை. அதிலும் குறிப்பாக யுத்த முனைகளில் நிகழ்வது, அங்கு மற்றெல்லா நிலைமைகளையும் விட விழிப்பும் எச்சரிக்கையும் அதிகம் என்ற காரணத்தால் இன்னும் அரிது. இருந்தும் நம்ப முடியாத அளவிற்கு அது நடந்து முடிந்துள்ளது. நம் கண் முன்னே. உலக மக்கள் அனைவரும் பார்க்கும் படியாக. பிரமிப்புறக் கூடியளவிற்கு. என்றென்றைக்கும் கொண்டாடக் கூடிய அளவிற்கு. மிகவும் பொருத்தமான காலத்திலும் இடத்திலும் மிகவும் பொருத்தமான சந்தர்ப்பத்திலும் துல்லியமாகக் கணிக்கப்பட்டு நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

பலநாட்கள் உலகின் மூலை முடுக்கெங்கும் விமானதளத் தாக்குதல் காட்சிகளும் செய்திகளும் பரபரப்பாக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் விமான நிலையத்தை பல மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமை இங்கு பாரிய சர்வதேச, வரலாற்று முக்கியத்துவமுடையதாகும். சிறிலங்காவில், வருங்காலங்களில் எதுவும் நடைபெறலாம் என்பது வலுப்படுத்தப்பட்டுள்ளது. உலகில், நான்கு ஆபத்துமிக்க நாடுகளில் ஒன்றாக சிறிலங்காவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை இதன் பிரதான பிரதிபலிப்பாகும். இவ்வாறாக சிறிலங்கா அரசு தன்னை பாதுகாத்துக் கொள்ளும் திறன் அற்றது என்பது சர்வதேச அளவில் துல்லியமாக நிறுவப்பட்டுவிட்டது.

யுத்தத்தை நிகழ்ச்சிநிரலாக்கி நகர்ந்து வந்த அரசிற்கு, அடுத்தடுத்து படுதோல்விகள் கிடைத்தாலும், தற்போது விழுந்துள்ள அடியானது அனைத்தையும் விட பாரதூரமானதாகும். அரசு, இனிவரும் காலத்தில் யுத்த நிகழ்ச்சி நிரலை பிரதானமாக்குவதன் சாத்தியமின்மை நிருபிக்கப்பட்டுள்ளது. இராணுவம் தற்போது ஒரு சில சிறிய தாக்குதல்களில் ஈடுபடுவதாக இருப்பின் அதற்கெனத் தான் நம்பியிருந்த விமானப் படையின் தாக்குதல் திறனில் பாதி நாசமாக்கப்பட்டதானது, இராணுவத்தின் எஞ்சியிருந்த மனவலிமையில் ஒரு நிரந்தர வீழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவே, இருக்கின்ற விமானங்களைக் கொண்டு நமது தாயகத்தில் அங்குமிங்குமாக குண்டுகளை எறிந்து குடிமனைகளையும் மக்களையும் தாக்கி அரசு தம் இயலாமையை வெளிப்படுத்துவதாகும். இதற்குமேல் அதற்கு இராணுவ நகர்வு என்பது தற்போதைக்கு முடியாத காரியம்.

அரசியல் பரிமாணங்களை எடுத்துக் கொள்வோம் எனின்... தாக்குதல் சாதனைகளும் அதன் பரிமாணங்களும், அது நிகழ்த்தப்பட்ட காலமும், இடமும் நமது மக்களின் அரசியல் உணர்வை வலுப்படுத்தியுள்ளது. தமிழீழப் பாதையில் இன்னுமொரு வெற்றிகரமான பாய்ச்சல் என்பதை ஸ்தூலமாக்கியுள்ளது. அரசு சமனிலை இழந்து, தன் இயலாமையை முஸ்லீம், மலையகத் தமிழ்ச் சமூகங்களுடன் தீர்த்துக் கொள்ளும் நிலைக்குச் சென்றுள்ளது. இதுவரை சந்தர்ப்பவாத அடிப்படையில் கொண்டிருந்த அரசியல் உறவுகளையும் கூட, குறைந்தபட்ச அளவிற்கேனும் பேண முடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

சிங்கள ஆளுங்குழுமமும், அதன் அடுத்தடுத்த பிரிவுகளும், அவற்றுடன் நெருக்கமான தொடர்பு சாதனத்துறையும், ஏற்பட்டுள்ள, ஏற்படவுள்ள இழப்பின் பாரதூரத்தைச் சரியாகவே எடைபோட்டுள்ளன. சிங்கள மேட்டுக் குடியினரின் இருப்புக்கும் நலன்களுக்கும் இத் தாக்குதலின் விளைவுகள் நேரடியாகவே வேட்டு வைத்துள்ளது இதற்குக் காரணமாகும்.

(தொடர்ச்சி 9ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்: 10

# முதியவர்கள்

இன்று முதுமைப் பருவத்தை அடைந்துள்ள மக்கள் பிரிவினர்தான் இன்றைய துடிப்பான சமூகத்தை நேற்று உருவாக்கியவர்களாவர். சமூகத்திற்கான தமது உழைப்பினாலும் வாழ்க்கைப் போராட்டங்களினாலும் மானுட வாழ்வின் ஆழமான அனுபவங்களைத் தாங்கி நிற்பவர்கள் இவர்கள்தான். எமது இன்றைய வாழ்வுக்கான தொடர்ச்சியும் இவர்களே!

வயதுத்துவ அடிப்படையில் முதியவர்களாக இனங்காணப்படும் மக்கள் பிரிவினர் பல்வேறு சமூக பின்புலங்களை (வர்க்கம், பாலினம், சாதியம், பிரதேசம், மதம்...) சார்ந்தவர்களாயிருப்பினும், தமக்கான பொதுவான சமூகப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில் இவர்களை நாம் ஒரு சமூகப்பிரிவினராக இனங் காண்கிறோம்.

நமது சமூகத்தில் சக மனிதர்களுக்கான பொறுப்பேற்புகள், கடப்பாடுகள், பராமரிப்புகள் யாவும் குடும்பம் எனும் அலகிற்குரியதாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. சமூகத்திற்காக உழைத்த இந்த முதியவர்கள் சார்ந்த பொறுப்பேற்பும் குடும்பத்தின் விவகாரமாக்கப் பட்டுள்ளது.

முற்றிலும் கருக் குடும்ப அமைப்பாகவும் பரிணமிக்காது, கூட்டுக் குடும்ப எச்ச சொச்சங்களுடனும் பொருளாதாரப் பற்றாக்குறைகளுடனும் திண்டாடிக் கொண்டிருக்கும் மூன்றாமுலகின் பெரும்பாலான குடும்ப அலகுகளில் முதியவர்கள் ஒரு சுமையாகவேக் கருதப்படுகின்றனர். தமது பெற்றார்களின் பாதுகாப்பு பராமரிப்பை பொறுப்பேற்க முடியாத நிலையில் பிள்ளைகள் உள்ளனர். வேண்டாத மனிதர்களாக தமது பிள்ளைகளில் தங்கி வாழும் நிலைக்கு முதியவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நவகாலனித்துவ பொருளாதார முறைமையாலும் உள்நாட்டு யுத்தத்தாலும் சிதைந்து போயிருக்கும் சிறிலங்காவில் முதியவர்கள் சார்ந்த சமூக மற்றும் அரச அணுகுமுறைகள் தான் என்ன?

தமது முதுமைக் காலத்தில் பிள்ளைகளை சார்ந்திருக்கும் பெற்றார்கள தமது உடலில் இறுதி வலு இருக்கும்வரை அவர்களின் குடும்பத்திற்காக உழைக்க நேர்ந்துள்ளது. இதே பெற்றோர்கள் உடல் இயங்க முடியாது படுக்கையில் விழுகையில் பெற்றாரை பிள்ளைகள் பெருஞ்சுமையாகவேக் காண்கின்றனர். சில குடும்பங்களில் முதியவர்கள் வீடுகளில் இருந்து துரத்தியடிக்கப் படுகின்றனர்.

இருப்பிட வசதியற்று தெருவோரங்களில் பிச்சையெடுத்து வாழ்வது, பசி, நோய், பராமரிப்பின்மை, சமூக கௌரவமின்மை, அனைத்துக்கும் மேலாக சமூகத்திற்கு சுமையாக கருதப்படுவது... இதுதான் இன்று பெரும்பான்மையான முதியவர்களின் நிலையாயுள்ளது.

அரசிற்கோ முதியவர்களின் நலன் காக்கும் திட்டங்கள் என்று ஒன்றுமில்லை. ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு சொந்த மக்களை பலியாக்கிவரும் இத் தரகு முதலாளித்துவ அரசானது, சமூகத்திற்காக உழைத்துத் தேய்ந்த தமது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களைப் பற்றி எங்கனம் கரிசனை கொள்ளும்?

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் அரசும் இணைந்து சில முதியோர் காப்பகங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதைவிட மத



நிறுவனங்களின் பராமரிப்பிலும் சில முதியோர் காப்பகங்கள் உண்டு. நாட்டிலுள்ள முதியவர்களின் எண்ணிக்கை மற்றும் தேவைகளுடன் ஒப்பிடுகையில் இம் முதியோர் காப்பகங்கள் வெறும் மாதிரிக்கானவையாக இருக்கின்றன.

அரச ஊழியர்களாக இருந்து ஓய்வூதியம் பெறும் முதியவர்கள் தவிர்ந்த விவசாயிகள், உழைப்பாளர்கள் மற்றும் நிறுவனங்கள் சாரா தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கும் முதுமை காலத்தில் பொருளாதார பலம் என்பது இல்லை. பத்தாண்டுகளுக்குள் தான் முதியவர்களுக்கு "பிச்சைச் சம்பளம்" எனும் முதுமைக்கால கொடுப்பனவுத் திட்டம் உருவாக்கப்பட்டு மாதாந்தம் 100 ரூபாய்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதைப் பெறுவதற்கான தகைமையையும் அரசியல் காரணிகளே பெரிதும் தீர்மானிக்கின்றன.

இந்நிலையில் யுத்தத்தால் சிதைக்கப்பட்டு வரும் நம் தேசத்து முதியவர்களின் வாழ்வானது பெரிதும் அவலகரமாகியுள்ளது.

யுத்த இடப் பெயர்வுகளால் தள்ளாத வயதில் முதியவர்கள் அலைக்களிக்கப் படுகின்றனர். அநேகமான முதியவர்கள் விமான குண்டு வீச்சு,செல்வீச்சு, இராணுவ முற்றுகை காரணமாக குடும்பத்தினர் இடம்பெயர்கையில் இடம்பெயர முடியாத நிலையில் சொந்த இடங்களிலேயே தனித்து தங்கிவிடுகின்றனர். இந்நிலையில் எதிரியின் அழித்தொழிப்பில் அநாதரவாக மரணிக்கும் நிலை நம் தேசத்தின் பல முதியவர்களுக்கு நேர்ந்துள்ளது.

பிள்ளைகள் சிறிலங்காவிற்கும், வெளிநாடுகளுக்கும் செல்ல தம்மைத் தாமே பராமரித்துக் கொண்டு யுத்தத்தின் அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்கொண்ட நிலையில் தனித்து வாழும் நிலைக்கு முதியவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். யுத்த அச்சுறுத்தல், தனிமை, உணவின்மை, ஊட்டச்சத்தின்மை, நோய், பராமரிப்பின்மை... காரணமாக பல முதியவர்கள் மனநோயாளிகளாகியுள்ளனர்.

முதியோர் நலத்திட்டங்கள் தமிழீழ முதியவர்களுக்கு சிங்கள அரசால் திட்டமிட்டே மறுக்கப்பட்டு வருவதுடன், நம் தேசத்தின் முதியோர் காப்பகத்தின் (கைதடி) மீதே குண்டு வீசி நம்முதியோர்களை படுகொலைசெய்தது இனவெறி அரசு. ஈவிரக்கமற்று முதியவர்களையும் கைது செய்து சித்திரவதை செய்கிறது. கூட்டுப் படுகொலைகள் செய்துள்ளது.

இதையெல்லாம் கடந்து விடுதலைப் போராட்டத்தில் முதியவர்களின் பங்களிப்பு என்பது தொடர்ச்சியாக இருந்து வருகிறது. எதிரியின் பிரதேசங்களை இளம் பிரிவினர் கடந்து போக்கு வரத்து செய்ய முடியாத நிலையில் குறிப்பாக நமது தேசத்தின் முதிய பெண்களும் ஆண்களும் எதிரியின் துன்புறுத்தல்களை எதிர்கொண்ட நிலையில் தேசத்தின், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக எல்லைகடந்து செல்லும் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். இளைஞர்கள், சிறுவர்கள் கைதாகையில் அவர்களை விடுவிக்கும், அவர்களுக்காக எதிரியுடன் வாதாடும் பொறுப்பை தமது தோள்களில் முதியவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். போராட்டத் தரப்பினருக்கான ஒத்துழைப்புகளை ஆபத்தை எதிர்கொண்ட நிலையில் வழங்கி வருகின்றனர்.

ஈழத்தமிழர் தேச உருவாக்கத்தை தீவிரப்படுத்திய தேசிய சமத்துவ உரிமைக்கான மக்கள் போராட்ட கால கட்டத்திற்கு தலைமையேற்றவரான நம் மக்களின் முதலாவது தேசிய தலைவரும் நம் தேசத் தந்தையுமான செல்வா அவர்கள், இந்திய ஆக்கிரமிப்பின் அட்டுழியங்களிலிருந்து நமது மக்கள் விடுதலை பெற அகிம்சை வழியில்

(தொடர்ச்சி 7ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிதைக்கப்பட்ட சிறிலங்கா பொருளாதாரம்

1977இல் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையானது, உள்ளார்ந்து நாட்டின் வளங்களையும் உழைப்பையும் மேலைத்தேய சக்திகளுக்கு தாரை வார்க்கப்படுவதை தொடக்கி வைத்தது. அத்துடன் சிறிலங்கா பொருளாதாரத்தின் எஞ்சியிருந்த சுயமும் சிதைந்து, மக்களின் நலன்களை நசுக்கியவாறு படிப்படியே அழிவுநோக்கி நகர்ந்தது.

83 இல் தமிழ்த் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு மற்றும் அழித்தொழிப்பு யுத்தத்துடன் சிறிலங்காவின் பொருளாதாரமானது ஒரு புறம் அந்நிய சுரண்டல் சக்திகளை திருப்திபடுத்துவதாகவும் மறுபுறம் யுத்தத்திற்கு தீனியிடுவதாயும் அமைந்தது.

1994 இன் பின்னரான சந்திரிகா காலகட்டத்துடன், திறந்த பொருளாதார கொள்கைகளின் விளைவாகவும் தொடர்ச்சியான யுத்தம் காரணமாகவும் ஏலவே உருவாகியிருந்த வீழ்ச்சியானது மேலும் தீவிரப்படத் தொடங்கியது, உலகமயமாதல் கொள்கையின் விளைவாக அனைத்து தேசிய நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்த உலக நிதியுதவி நிறுவனங்கள் அரசை அழுத்தத் தொடங்கியது. தபால்துறை, போக்குவரத்து, மின்சாரம், தண்ணீர் வாரியம், விமான சேவை, கப்பற் போக்குவரத்து துறையும் துறைமுக சேவையும், சுகார மற்றும் மருத்துவ துறை, கல்வித்துறை என தனியார் மயப்படுத்தலுடன் இச்சேவைகளுக்கான வரிகள் இரட்டிப்பாக அதிகரிக்கத் தொடங்கின. சமூக நலத்திட்டங்கள் பெரிதும் சுருக்கப்பட்டன. நாட்டின் வளங்கள் அந்நிய சக்திகளுக்கு மூலப் பொருட்களாகவே விற்கப்பட்டு விட்டன. கடல் வளம், நிலவளம், தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் ஜீவ வித்துக்களுக்கான உரிமை என இலங்கைத் தீவின் மக்களுக்கான அனைத்தும் உலக நிதி நிறுவனங்களுக்குரியதாகி விட்டுள்ளது.

சந்திரிகா அரசினால் முன்னெடுக்கப்பட்ட தீவிர யுத்தக் கொள்கை உருவாக்கிய செலவினங்களுக்கான கடன்களை வழங்குவதுடன் மேற்படி தமது நோக்கங்களை அந்நிய சக்திகளும் உலக வங்கியும் நிறைவேற்றிக் கொள்ளத் தொடங்கின.

ஒருபுறம் ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கைக்கு பலியானமை. மறுபுறம் இன்னொரு தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு யுத்தமும் அதற்கான யுத்தப் பொருளாதாரமும். இவ்விரண்டினாலும் சிறிலங்கா பொருளாதாரம் பெருத்த நெருக்கடிகளுடன் கடந்த ஒவ்வொரு நிதியாண்டிலும் தன்னை மேலும் கடன்களுக்குள்தான் மூழ்கடித்து வருகின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளினதும் வரவு செலவுத் திட்டங்களை எடுத்துப் பார்த்தால், ஒவ்வொரு வருடமும் யுத்த செலவினங்கள் அதிகரிப்பதும், அத்தியாவசிய நுகர்வு பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரித்து வருவதையும், துண்டுவிழும் தொகையின் வீதம் மற்றும் அந்நியக் கடன் ஈடுசெய்ய முடியாத அளவிற்கு அதிகரித்திருப்பதையும் நாம் காண முடியும். இப்படிப்பட்ட நிலையில், சிறிலங்கா அரசிற்கு, ஆனையிறவு வீழ்ச்சியானது வரலாற்றுப் பேரிடியாக அமைந்தது.

எனினும், யுத்தமே அதன் ஒரே தெரிவு என்ற நிலையில் 2000 - 2001 நிதியாண்டிற்கான மொத்த தேசிய ஒதுக்கீட்டிலிருந்து முன்னெப்போதும் இல்லாத வகையில் மூன்றிலொரு பகுதியை, செலவளித்து முன்னெப்பொழுதும் வாங்காதளவுக்கு பெருந்தொகை ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. நன்கு தயாரிப்புகளுடன் திட்டமிட்டு 2001 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட அக்கினி சுவாலை விடுதலை புலிகளினால் அணைக்கப்பட்டது. இதனுடன் அரசின் இறுதி நப்பாசையும் சிதைந்து போயிற்று.

தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தில் தோல்வி மேல் தோல்வியுற்று இராணுவ அர்த்தத்தில் முதுகெலும்பு முறிக்கப்பட்டு, சர்வதேச அளவில் அரசியல் ரீதியிலும் தோல்வி கண்ட சிங்கள அரசு சர்வதேச சந்தை நிலவரங்களுக்கேற்ப நாணயத்தை மிதக்கவிடும் நிலைமைக்கு தள்ளப்பட்டது. இது முற்றிலும் அந்நிய நிதிமூலதன ஆதிக்க சக்திகளே சிறிலங்கா நிதிமூலதனத்தையும் அதன் மூலமாக நாட்டின் பொருளாதாரத்தையும் நிர்ணயிப்பதை தமது கைகளுக்கெடுப்பதாக அமைந்தது. நாட்டின் பணவீக்கம் உச்சத்தை அடைந்தது. சிங்கள அதிகார வர்க்கத்திற்குள் குழப்பங்கள் உருவாகி அரசியல் அரங்கிலும் அது வெளிப்படத் தொடங்கியது. அரசின் ஸ்திரத் தன்மை கேள்விக்குள்ளானது.

இவ்வாறான சூழலில், மரண அடியாக கட்டுநாயக்க விமானப்படைத்தள தாக்குதலும் அதன் பின்னான தொடர்சங்கிலி விளைவுகளும் அமைந்தது. இத்தாக்குதலின் நேரடி விளைவாக சிறிலங்கா அரசு இருபதினாயிரம் கோடி ரூபாய்களை இழந்தது.

ஆனால் அடுத்து வந்த இழப்புகளோ, சோவினிச பொருளாதார நிபுணர்களும் அரசும் சிங்கள அதிகார வர்க்கமும் கற்பனையிலும் கூட எதிர்பார்த்திராத வீழ்ச்சிகளை அரசுக்கு ஏற்படுத்துவனவாயுள்ளன. அந்நிய வருவாயையும் ஊக வாணிபத்தையும் சார்ந்திருந்த பொருளாதாரம் ஒவ்வொரு நிமிடமும் தனது இறுதி மூச்சினை விடத் தொடங்கியுள்ளது.

அந்நிய முதலீடுகள் பலவும் நிறுத்தப்பட்டன அல்லது ஒத்திவைக்கப்பட்டன. சர்வதேச விமான, கப்பல் போக்குவரத்துக்கான காப்பீடு உச்சத்துக்கே சென்றதால் சர்வதேச போக்குவரத்து நிறுவனங்கள் சிறிலங்காவைத் தவிர்த்தன அல்லது பாரிய தொகையை அறவிட்டன. ஆடை மற்றும் சுதந்திர வர்த்தக வலைய உற்பத்திகள் தடைபட்டன. கப்பல், விமான போக்குவரத்தில் ஏற்பட்ட ஸ்தம்பிதம் காரணமாக உற்பத்தி பொருட்களை குறிப்பிட்ட காலத்தில் ஏற்றுமதி செய்ய முடியாமலும் உற்பத்திக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்யமுடியாமலும் போனது. பல அந்நிய நிறுவனங்கள் தமது எதிர்காலக் கொள்வனவு ஒப்பந்தங்களை நீக்கிக் கொண்டுள்ளன. பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி சீராக இல்லாததால் பணமுடக்கமும் அதிக செலவுகளும் ஏற்பட்டுள்ளதோடு அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டற்று அதிகரிக்கிறது. பல சர்வதேச நாடுகள் தங்கள் பிரஜைகளை சிறிலங்காவுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவித்துள்ளன. உல்லாச பயணத்துறை முற்றிலும் முடமாகி விட்டது. இதனால் இதை சார்ந்து இயங்கிய உல்லாச விடுதி துறைகள் மற்றும் சிறு வியாபாரங்கள், போக்குவரத்து

(தொடர்ச்சி 6ல்)

## 12. 08. 2001 அன்று அகால மரணமான தோழர் குமாரசாமி சிவராசாவிற்கு நமது அஞ்சலிகள்!



யாழ்ப்பாணம், நெல்லியடி கரவெட்டி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவர் தோழர் குமாரசாமி சிவராசா. தனது மாணவ வயதிலேயே மார்க்சிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு புரட்சிகர அரசியலை தெரிவு செய்தார். சாதி ஒழிப்பு போராட்டங்களிலும் ஆலயப் பிரவேச போராட்டங்களிலும் தீவிரமாக பங்குபற்றியவர்.

தேசவிடுதலை போராட்டம் முனைப்படைந்த காலப்பகுதியில் அதனை புரட்சிகர அம்சத்துடனும் ஜனநாயகப் பண்புகளுடனும் வளர்த்தெடுக்க வேண்டும் எனும் ஆர்வத்துடன் பல்வேறு விடுதலை அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி தீவிரமாக செயற்பட்டார். மக்கள் அரசியலில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடுகள் காரணமாக தமிழ் அமைப்புகளின் ஜனநாயக மறுப்பிற்கு உள்ளாகி தனது சொந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்து சிறிலங்கா செல்ல நேர்ந்தது.

சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியில் யாழ் கிளையில் தீவிர செயற்பாட்டாளராக இருந்தவர் பின்னர் மத்தியகுழு உறுப்பினர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர். அவர் தனது சொந்த வளங்கள் அனைத்தையும் கட்சிக்கும் புரட்சிகர செயற்பாடுகளுக்கும் வழங்கியதுடன் எளிமையான வாழ்வை மேற்கொண்டு வந்தார். தான் சார்ந்திருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தேச விடுதலை போராட்டத்தில் சரியான நிலைப்பாடு எடுக்காத காரணத்தினால் அதனுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். இறுதி வரையில் தனது கொள்கையில் உறுதியாயிருந்த அவர் சலுகைகளுக்காக யாரையும் மண்டியிட்டதில்லை. தவறான சக்திகளை அவர் புறமொதுக்கினார். நுரையீரல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த அவர் தனது 55 வயதில் அகால மரணமாடைந்தார்.

புரட்சிகர அரசியலை தனது வாழ்வாக வரித்துக் கொண்டிருந்தவரும் தன் இறுதிக் காலங்களில் தமிழீழ மக்கள் கட்சியின் தீவிர ஆதரவாளராகத் திகழ்ந்தவருமான தோழர் சிவராசாவிற்கு நமது கட்சி தனது அஞ்சலிகளை சமர்ப்பிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிதைக்கப்பட்ட (5ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்கள் யாவும் தேக்கமடைந்துள்ளன. தெற்கில் உல்லாசபயணிகளுக்கான ஒட்டல்கள் மூடப்பட்டு வருகின்றன. இவையெல்லாவற்றினாலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நூற்றுக் கணக்கானோர் வேலையிழந்து வருகின்றனர்.

சிறிலங்கா பொருளாதாரக் கட்டுமானத்திற்கு பக்க ஆதாரமாகத் திகழ்ந்த அனைத்து துணை வருவாய்க் கட்டுமாணங்களும் உதிரத் தொடங்கியுள்ளன. பதினையாயிரம் கோடி ரூபாய்களை சிங்கள அரசு இழந்து தடுமாறி நிற்கின்றது. இதன் விளைவாக சிங்கள தேசத்திலேயே உருவாகி வரும் அரசியல் குழப்பகரமான நிலைமைகள், அரசு ஸ்திரத் தன்மை இழந்து போயிருக்கின்றமை...

இந்த வரலாறு காணாத இழப்பென்பது நாணயமதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அதன் தாக்கம் ஒட்டுமொத்த சமூக அமைப்பையும், சமூக நிறுவனங்கள் முதல்குடும்ப அலகு வரையும், அவற்றினது அன்றாட வாழ்வில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தி ஒழுங்கமைவை சிதைத்து அவற்றை சீர்குலைக்கும் ஆற்றலையும் மிகவும் அதிகமாகவே கொண்டுள்ளது.

ஜனசக்தி, சமுர்தி கொடுப்பனவுகள், பிச்சைச் சம்பள கொடுப்பனவுகள் குறைக்கப்படும் அல்லது யுத்தத்தை காரணங்காட்டி நிறுத்தப்படும். வேலையின்மை, ஸ்திரமான வாழ்வின்மை, வன்முறை அதிகரிப்பு, கசிப்பு போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரிப்பு, சமூகச் சீர்குலைவுகள் போன்றன பெருகும். இவையாவும் குடும்பம் எனும் சிறு அலகிலும் கொந்தளிப்புகளை ஏற்படுத்தும். குடும்பப் பகைகள், கொலைகள், தற்கொலைகள் அதிகரிக்கும், பாதாள உலக நடவடிக்கைகள், சமூக வன்முறைகள் அதிகரிக்கும். பெண்கள் மீதான வன்முறைகள் இன்னும் அதிகரிக்கும். மக்கள் அதிருப்தி உச்சத்தை அடையும். அரசியந்திர வன்முறை அதிகரிக்கும். பொதுவில் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் நாடுகளுக்கு ஏற்படும் நிலை இங்கு சற்று அதிகமாகவே ஏற்படும்.

அரசு பொருளாதார ஸ்திரத்தை இழந்திருப்பதால் நாட்டின் சிவில் நிர்வாகம் இன்னும் சிதைவடையும், ஊழல் பிடித்த சட்ட ஒழுங்குகள் மேலும் தகர்வுறும், ஜனநாயகத் தன்மைக்கான எச்சசொச்சங்களும் அரச அளவிலும் சமூக அளவிலும் அழிந்து போகும். கொலை கலாச்சாரமும் அரச பயங்கரவாதமும் சிங்கள தேசத்தை மீள சிதைக்கும். ஒட்டுமொத்த சமூக வாழ்வும் சீர்குலைந்து மேலும் மேலும் வாழ்க்கை பேரழிவுமிக்கதாகும்.

இந்த விளைவுகள் அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்வு அனைத்திலும் தன்பங்கிற்கு எதிர்வினை புரியும்.

எதனால் இவை யாவும்....?

ஈழத்தமிழரின் தேசிய வாழ்வை சிதைக்க முயன்றதன் எதிர்விளைவாக, தனது சோவினிச வெறியின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளின் விளைவாக. சிங்கள அரசும் அதன் ஆழுங்குழுமமும் இன்று இப்பாரிய அழிவை எதிர்கொண்டு நிற்கின்றன. இந்த இனவாத முன்னெடுப்பை ஆதரித்து நிற்கும் சிங்கள தேசமும் தன்னளவில் இதைத் தாங்க நேர்ந்துள்ளது.

நமது தேசத்தின் இருப்பை வேரறுக்க முயன்ற சிங்கள அரசிற்கு நமது தேசம் வழங்கியுள்ள நிவர்த்திக்க முடியாத தண்டனை தான் இந்நிலைமை.

நமது தேசத்தின் பதினான்கு பேரின் அர்ப்பணிப்பில் எதிரியின் பொருளாதார மைய நரம்பு சிதைக்கப்பட்டு விட்டது. அதன் விளைவுகளை அவர்கள் அனுபவிக்கின்றனர். உலக வரலாறு பதிவு செய்து கொண்டிருக்கிறது.

◆ சுபத்திரா

## நெற்றிமண்

வலிமையைப் பாடு.
வாழ்வின்
வலிமையைப் பாடு.
புலம்பலிலிருந்தும் விடுபட்டு
புதுநாதங்களின் குரலெடுத்து
வலிமையைப் பாடு.

வாழ்வோ வலியது.
மெல்லிதயம் கொண்டோமாயினும்
அதைக் காப்பாற்றிக் கொள்ளப்
போராடித்தானாக வேண்டும்.
ஏனெனில் ஏனெனில்
வாழ்வோ வலியது.
எனவே வாழ்வின் வலிமையைப் பாடு.
வேர்கள் வலியன பாடு.
மண்ணிடை வேர்களின்
மென்முனை இயக்கம் வலியது.
பாறை பிளந்து நீரை உறிஞ்சுது
வலிமையின் வேரோட்டம்.
கிளைகள் நிறையப் பூக்களின் அழகு
கீழிருந்து மேலெழுகிற வலிமையின் இதழ் விரிவு.
காற்றில் வீசும் நறுமணம்
வலிமையின் மென்னுயிர் வாசம்.
எனவே காற்றில் கலந்தும்
கனமலை கடந்தும்
வாழ்வின் உள்ளான்ம வலிமையைப் பாடு.

ஏனெனில் ஏனெனில் வாழ்வோ வலியது.
வலிமையோடதை எதிர்கொள்வோம் பாடு.
வாழ்வின் வலிமையைப் பாடு.

❋ சு. வில்வரத்தினம்

நன்றி: நெற்றிமண்

## அடிப்படைப் பிரிவினர்.... (4ம் பக்க தொடர்ச்சி)

உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி உயிர்நீத்த அன்னை பூபதி அவர்கள், யுத்த சூழலில் மக்களுடன் வாழ்ந்தபடி தேசத்தின் குரலாக ஒலிக்கும் மதத் தலைவர்கள், சிறு அமைப்புக்களின் தலைவர்கள், ஆசிரியர் மற்றும் பல்கலைக் கழகத்தினர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், தனிநபர்கள் என நம் தலைமுறைகளும் பெருமை கொள்ளத்தக்க முதியவர்களை நம் தேசம் கொண்டுள்ளது.

தாயகத்தில் பாதுகாப்பும் அரவணைப்பும் அற்று யுத்த சூழலில் வாழும் நம் தேசத்தின் முதியவர்களை பாதுகாப்பதை நமது தேசத்தின், சமூகத்தின் கடமையாகக் கொள்வோம். முதியவர்கள் சார்ந்து நாம் உடனடியாக முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் உள்ளன. தொண்டர் அமைப்புகளை சார்ந்தோர், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் அமைப்பினர்கள், மத ஊழியர்கள் ஆகிய சமூக பற்றாளர்கள் தனித்து வாழும் முதியவர்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டி அவர்களின் தேவைகளில் ஒத்துழைப்பு வழங்கிடும் வேலைத் திட்டங்களை உருவாக்கிட வேண்டும். தாம் அநாதரவாக இல்லை, தமது சொந்த மக்கள் தம்மை தாங்குகிறார்கள் எனும் அடிப்படை நம்பிக்கை உணர்வை முதியவர்களின். மத்தியில் உருவாக்கிட வேண்டும். இது இன்று நம் தேச முதியவர்களுக்கான உடனடி தேவையாக உள்ளது.

சமூக வளர்ச்சியில் பிரதான பங்கேற்பு செய்த பிரிவினரை அவர்களது முதுமைக் காலத்தில் சமூகம் எவ்வாறு அணுகுகிறது என்பது அச்சமூகத்தின் விழுமியங்கள், அறநெறிகளுக்கான அளவுகோலாயுள்ளது. முதியவர்கள் சார்ந்து பிற்போக்கான அணுகுமுறையைக் கொண்டுள்ள சமூகம் தன்னளவில் குறைவிருத்தியுடையதாகும். ஈழத்தமிழ் சமூகத்தின் முதியவர்கள் சார்ந்த கணிப்பீடுகள் மிகவும் பிற்போககானவை என்பதை வெட்கத்துடன் ஏற்றுக் கொள்வோம்.

அமையப்பெறும் தமிழீழ குடியரசானது முதியவர்களது நலன்களை பாதுகாத்திடும், நீண்டகால திட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். முதியவர்களது அனுபவங்களை புதிய சமூக நிர்மாணத்தில் உரிய வகையில் இணைத்துக் கொள்வது தமிழீழ சுதந்திரக் குடியரசின் கடமையாகும். தாம் வாழும் நாள் அளவும் தாம் சமூகத்திற்கு சுமையாக இல்லை எனும் உணர்வை அவர்கள் மத்தியில் உருவாக்கிட வேண்டும். முதியவர்கள் சார்ந்து சமூகம் கொண்டிருக்கும் பிற்போக்கான சிந்தாந்தத்தை சிதைத்து அவர்களும் சமூகத்தில் சமத்துவமான பிரிவினர் என்பதை அரசமைப்பு ரீதியாக உறுதிபடுத்துவதும் நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த செயற்படுவதும் ஜனநாயக சமூக உருவாக்கத்திற்கு அடிப்படை நிபந்தனையாகும்.

◆ அங்கவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழக அகதி வாழ்வில் தமிழீழப் பெண்கள்

தமது சொந்த மண்ணில் இருந்து, தாம் பாரம்பரியமாக பரிச்சயப்பட்ட சூழலில் இருந்து புலம்பெயர்ந்து செல்வதென்பது மனிதர்களுக்கு அத்தனை இலகுவானதல்ல. அதுவும் போரினால் அகதிகளாக தமது அடையாளங்களை, உடமைகளை, உறவுகளை, நமது மண்ணை இழந்து வெறுங்கையினராக முற்றிலும் அந்நிய பிரதேசத்தில் புலம் பெயர்ந்து வாழும் மககளின் நிலை பெரிதும் துன்பகரமானது.

அகதி வாழ்வே கொடியதென்றால் அகதிகளாக வாழும் பெண்களின் நிலை எத்தனை போராட்டங்களுடன் கூடியது? தாம் பாரம்பரியமாக வாழும் தமக்கு உரித்துடைய மண்ணிலேயே பெண்கள் ஆணாதிக்க முறைமையினால் அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்கொள்ளும் நிலையில், நம்மையும் நமது போராட்டத்தையும் நேரடியாக எதிர்த்திடும் துன்புறுத்திடும் இந்திய, தமிழக அரசுகளின் பிடியில், ஈழத் தமிழர்களின் பால் வெறுப்புணர்வு சித்தாந்தம் பரப்பப்பட்டிருக்கும் சூழலில், அகதிகளாக வாழும் நமது பெண்களின் நிலைமை மிகவும் மோசமானது.

இக்கொடுமைகளைத் தெரிந்து கொள்வதும், அவர்களது உரிமைகளுக்காக குரல்கொடுப்பதும் ஈழத் தமிழரான நம்மனைவரினதும் கடமையாகும்.

தாயகத்தில் பெண்கள் மீது எதிரிகளால் மேற்கொள்ளப்படும் வன்முறை அச்சுறுத்தல், தமது தந்தையர்கள், கணவர்கள், பிள்ளைகள், சகோதரர்கள் கைது செய்யப்படுதல் மற்றும் சித்திரவதைகள், படுகொலைகள் போன்றவற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன் தமது சிறு சேமிப்புகள், உடமைகளையெல்லாம் விற்று பல ஆயிரம் ரூபாய்களை கடற் பயணத்திற்காகச் செலுத்தி தமிழகத்திற்கு செல்லும் முயற்சியை மேற்கொள்வதில் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான பங்குண்டு.

தமதும் குடும்ப உறுப்பினர்களினதும் உயிர்பாதுகாப்பு மற்றும் குடும்பமாக சேர்ந்து வாழ்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் தமிழகம் செல்லும் பெண்களுக்கு தமிழக கடற்கரையிலேயே முதலாவது அதிர்ச்சி காத்திருக்கிறது.

- கரையை சென்றடையும் படகுகளின் அடிப்படையில் மக்கள் முகாம்களுக்கு பிரித்து அனுப்பப்படுகின்றனர். குடும்ப அடிப்படையில் அல்ல. படகுகளில் இடப்பற்றாக்குறை, மற்றும் காரணங்களினால் மனைவி, கணவன், பிள்ளைகள் ஒருபடகில் செல்ல முடியாது வேறு வேறு படகுகளில் செல்லும் சந்தர்ப்பங்கள் உண்டு. அந்நிலையில், கணவன் பயணம் செய்த படகைச் சார்ந்தவர்கள் ஒரு முகாமிற்கும், மனைவி பயணம் செய்த முகாமைச் சார்ந்தவர்கள் பிறிதொரு முகாமிற்குமாக அனுப்பப்படுகின்றனர். இம்முகாம்கள் ஒன்றுக்கொன்று பல நூறு கிலோ மீட்டர்கள் தொலைவில் இருப்பனவாயும் இருக்கும். அகதிகளின் மீது திணிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பு விதிகளுக்கமைய ஒருவருடத்திற்கு அகதிகள் முகாமிலிருந்து வெளியில் செல்ல முடியாது. அவ்வாறே இலகுவில் தான் விரும்பும் முகாமுக்கு மாற்றலாகி செல்லவும் முடியாது. இதனால் பலவருடங்களாக குடும்ப உறுப்பினர்கள் இணைய முடியாது வேறு வேறு முகாம்களில் பிரிந்துவாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மனைவி, பிள்ளைகளை சென்றுபார்க்கும் அனுமதியை கணவன் பெற்றாலும் கூட பயணச் செலவுக்காகவே அவர் நீண்ட நாட்கள் உழைப்பில் ஈடுபட வேண்டியுள்ளது. இவ்வாறு கணவனை பிரிந்து வாழ நேரும் பெண்கள் அனைத்து வழிகளிலும் இடர்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நேர்கிறது.



- சில சந்தர்ப்பங்களில் தாயக கரையிலிருந்து புறப்படும் படகுகள் தமிழக கரையை அடையாது இந்திய கடல் எல்லைக்குள்ள சிறு தீவுகளில் அகதிகளை இறக்கிவிட்டுச் செல்லும். இவ்வாறு அகதிகள் கடல்த் திட்டிகளில் தனித்து விடப்படுவது அவர்களின் அடிப்படை உணவு, குடிநீர், மழை, வெயில்பாதுகாப்பிலிருந்து உயிர்ப்பாதுகாப்பும் இல்லாத நிலைக்குத் தள்ளிவிடுகிறது. தமிழக படகோட்டிகளின் உதவியை நாடுகையில் முற்றிலும் தமது உயிரை அவர்களது கைகளில் ஒப்படைப்பதான நிலைக்கு நமது மக்கள் தள்ளப்படுகின்றனர். இது பெண்களின் பாதுகாப்பிற்கு முற்றிலும் எதிரானதாயுள்ளது. அகதியாக சென்ற பெண்ணை தமிழக படகோட்டிகள் கடலில் வைத்தே கடத்திச் சென்று கூட்டு வன்புணர்ச்சிக்குள்ளாக்கி படுகொலை செய்த நிகழ்வை நாம் இதனுடன் தொடர்புபடுத்தி பார்க்க முடியும்.

- கரையை அடைந்த உடனேயே விசாரணை நடைபெறும். இதில் ஆண்கள் போராளிகள் என சந்தேகிக்கப்பட்டால் சிறைக்கு அல்லது விசேட முகாமுக்கு அனுப்பப்படுகின்றர். இந்நிலையில் பெண்கள் புதிய சூழலில் தமது பிள்ளைகளுடன் அல்லது தனியனாக அனாதரவாவதை பொலிசும் அரச அதிகாரிகளும் தமது பாலியல் வக்கிரங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முனைவது சகஜமானதாகியுள்ளது.

- அவ்வாறே பெண்கள் பொலிஸ் மற்றும் அதிகாரிகளினால் பாலியல் தேவைகளுக்காக நிர்ப்பந்திப்பதும், இணங்காவிடில் போராளிகளாக குற்றஞ்சாட்டி சிறைக்கும் சிறப்புமுகாமுக்கும் அனுப்பப்படுவதும் தமிழக அகதிவாழ்வில் நமது பெண்கள் எதிர்கொள்ளும் பெரும் அடக்குமுறையாக இருந்து வருகிறது.

- ஆண்கள் சிறைக்கும் சிறப்பு முகாமுக்கும் அனுப்பப்படுகையில் தனித்திடும் பெண்கள் மிக மோசமான பொருளாதார சுமைகளை எதிர் கொள்ள நேர்கிறது. பிள்ளைகளையும் முதியவர்களையும் பராமரிப்பது, போஷிப்பது, சிறையிருக்கும் கணவன், சகோதரர்களை சென்று பார்ப்பது, அதற்கான செலவு, சிறைச்சாலை அதிகாரிகளின் நெருக்குதல்கள் என...

- தொழில் தேடியும், விறகுபொறுக்க, குடிநீர் எடுக்க, பாடசாலைக்கு என முகாமுக்கு வெளியில் செல்லும் பெண்கள் உள்ளூர் காடையர்களின் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் இலக்காக நேர்கிறது. தமிழீழ பெண்களை கூட்டு வண்புணர்ச்சிக் குள்ளாக்கி படுகொலை செய்த சம்பவங்கள் தமிழகத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும் இது சார்ந்து சட்டரீதியாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததுடன் நமது பெண்களுக்காக குரல் கொடுக்கக் கூட யாரும் இல்லாத நிலையே காணப்படுகிறது. குறைந்த பட்சம் தமிழகத்தின் பிரபல்யமான பத்திரிகைகள் கூட இக்கொடு-

(தொடர்ச்சி 10ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கட்டுநாயக்க: வெற்றியின் பின்னணியில் மக்கள் சக்தி!

தென்னாசியாவையே அதிரவைத்த, உலக வரலாற்றிலே முதன் முதலாக இவ்வளவு விமானங்கள் ஓரேநாளில் ஒரு கெரில்லா அமைப்பினால் தகர்க்கப்பட்ட, இந்தக் கட்டுநாயக்க விமானப் படைத்தள தாக்குதலானது நமது விடுதலை போராட்டத்தின் பக்கத்தில் மிகவும் கனதியான அரசியல் வெற்றியை உருவாக்கியிருப்பதை எதிரிகளே பகிரங்கமாக ஒத்துக்கொள்ள நேர்ந்துள்ளது. இவ்வாறான ஒரு அரசியல் வெற்றி என்பது ஒரு திடீர் தாக்குதல் நடவடிக்கையினால் மட்டுமே உருவாகக் கூடியதல்ல. தொடர்ச்சியானதும் தீர்க்கமானதுமான எமது தேசத்தின் பல்வகை அரசியல், இராணுவ, இராஜதந்திரப் போராட்டங்களின் திரட்சியினால் கிடைத்திருந்த ஒரு பலமான அரசியல் பின்புலத்தில், இத்தாக்குதல் நடைபெற்றதனாலேயே சர்வதேச அளவிலான அரசியல் முக்கியத்துவத்தை நமது போராட்டத்திற்கு ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது.



தமிழீழ விடுதலைப் போராட்ட வளர்ச்சிப் போக்கானது பல்வேறு போராட்ட கட்டங்களையும், போராட்ட வடிவங்களையும் கொண்டது. இயங்கியல் ரீதியான சிக்கலான பண்புடையது. அரசியல் சமவுரிமைக்காக வெடித்துக் கிளர்ந்த மக்கள் போராட்டங்கள், அது ஏற்படுத்திய விழிப்புணர்விலும் அரசியல் பலத்திலும் உருவான தேசவிடுதலை நோக்கிய உறுதியான திருப்பமும் ஆயுதப் போராட்டமும், ஆயுதப் போராட்டத்தின் தீவிர வளர்ச்சி, தீர்க்கமான இராணுவ வெற்றிகள் தந்த பலத்திலும் உருவாகியுள்ள புதிய அரசியல் சூழ்நிலைமைகளுக்கும் ஏற்ப மீண்டும் விரிவடைந்து வரும் மக்கள் போராட்டம், மக்கள் போராட்டமும் ஆயுதப் போராட்டமும் மீண்டும் ஒன்றை ஒன்று பலப்படுத்துதல், இரண்டு வகைப் போராட்டங்களும் விடுதலைக்கு தவிர்க்க முடியாததாகியிருக்கும் நிலைமை... இத்தகைய வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நாம் கட்டுநாயக்க விமானப் படைத்தள தகர்வின் அரசியல் வெற்றியை நோக்குவோமாயின் மக்கள் போராட்டங்களின் பெறுமதி இவ் அரசியல் வெற்றியை தாங்கி நிற்பதை நாம் காண முடியும்.

வன்னி பெரு நிலப்பரப்பு மீட்புடன் நமது போராட்டம் புதுப்பலம் பெறத் தொடங்கியதும், அது சார்ந்து சர்வதேச அளவில் கருக்கொள்ளத் தொடங்கிய விழிப்புணர்வும், எதிரியின் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் பல்வேறு தரப்பினரும் எழுச்சியுற்று தேசமெங்கும் மக்கள் போராட்டங்கள் கிளர்ந்தன. ஆனையிறவு வெற்றியுடன் கூடிய பெருந்திருப்பம், புலிகளின் வெற்றிகரமான இராஜதந்திர முன்னெடுப்புகள் என்பன போராட்டத்தின் அரசியல் வெற்றிக்கு மேலும் பலத்தைக் கொடுத்தன. இவ்வரசியல் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் சுயநிர்ணய உரிமைக்கான பொங்கு தமிழ் மற்றும் பொதுமக்கள் போராட்டங்கள், புலிகள் மீதான தடைக்கெதிராக தமிழ் அமைப்புகளின் தேசம் தழுவிய நிலைப்பாடு, பல்வேறு மாணவர் போராட்டங்கள், பெண்கள் மீதான வன்புணர்ச்சிக்கெதிரான சக தேசங்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற ஹர்த்தால் போராட்டம்... என மக்கள் எழுச்சியில் போராட்டம் மேலும் மேலும் புதிய பண்பில் திரட்சி பெறத் தொடங்கியது.

இவ்வாறு மக்கள் போராட்டத்தினால் நமது போராட்டத்தின் தார்மீக வளர்ச்சி கனதியுற்று வந்த காலகட்டத்தில் நடந்த விமானப்படைத்தள தாக்குதலானது பெரும் அரசியல் வெற்றியை நம் தேசத்திற்கு ஈட்டித் தந்துள்ளது.

மன்னார் கடற்படையினரால் வன்புணர்ச்சி மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளாகி சிறைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தே எதிரிகளை துணிகரமாக அம்பலப்படுத்திய நம் தேசத்து சகோதரிகள் விஜிகலா, சிவமணி தொடரும் படையினரின் வன்புணர்ச்சிகளை பகிரங்கமாக்கும் சகோதரிகள், இவ்வகையான போராட்டங்களை முன்னின்று நடாத்திய கத்தோலிக்க மதத் தலைவர்கள், மக்கள் போராட்ட சக்திகளை திட்டமிட்டு சிதைக்கும் அரசின் நடவடிக்கைகளை சித்திரவதைக்குள்ளாகியும் எதிரியின் பிடியில் இருந்து கொண்டே உலகுக்கு அறிவித்த மாணவர் தலைவன் திவ்யன்... படைத்தரப்பினரின் பகிரங்க அச்சுறுத்தல்களையும் மீறி பல்கலைக் கழக மாணவர்களின் தலைமையிலான தொடர்ச்சியான பொங்குதமிழ் நிகழ்வுகள், தமிழ் ஆசிரியர் சங்கம் போன்ற வெகுஜன இயக்கங்களின் பங்களிப்புக்கள், தமிழ் ஊடகங்களின் துணிகரமான பாத்திரம்... இவர்களைப் போன்ற இன்னும் பலரின் தேசப்பற்றும் துணிவுமானது மக்கள் அரசியலின் பாய்ச்சலுக்கு தூண்டு விசையாயின. இவ்வாறு தனிமனிதர்களும் கூட்டுத்தலைமைகளும் ஆற்றிய அரசியல் பாத்திரங்களும் இவ்விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதலால் கிடைத்த அரசியல் வெற்றியில் பின்னிக் கிடக்கின்றன.

அவ்வகையில், அண்மைக்காலமாக கிடைத்து வரும் இராணுவ வெற்றிக்கும் சமகாலத்தில் நடந்து வரும் மக்கள் போராட்டங்களுக்கும் இடையிலான இயங்கியல் உறவைச் சரியாகக் கணித்து எமது தேச விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போமெனில், விரைவில் எந்தவகை எதிரிகளையும் வெல்வதும் தமிழீழச் சுதந்திரக் குடியரசு அமைவதும் உறுதிப்படுத்தப்படும்.

◆ சியா

## முன்னேறித் (1ம் பக்கத் தொடர்)

புடம்போடும் வகையில் விடுதலைக் கலாச்சாரத்தையும் புரட்சிகர உணர்வையும் மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவோம். மக்கள் கலை இலக்கியங்களை பரவலாக்குவோம். சமூகத்தில் தொடர்ந்துவரும் அக அடக்கு முறைகளை ஒழித்திடுவதற்கான விழிப்புணர்வுபிரச்சாரங்களை தீவிரப்படுத்தி, சமத்துவமான சமூக வாழ்விற்கான அரசியல்உணர்விற்கு வித்திடுவோம்.

எதிரியை முன்னேறித் தாக்குவது, துடைத்தெறிவது, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை விரிவாக்குவது, புதிய சமூதாயத்திற்கான வகை மாதிரிகளை நிறுவுவது, மக்களின் பங்களிப்பினை விரிவாக்குவது, மக்களுக்கு அனைத்து அதிகாரங்களும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதை நோக்கி முன்னேறுவது. இவற்றில் ஊன்றி நின்று மறுபடியும் எதிரியைத் தாக்குவது, முன்னேறுவது, தங்கு தடையற்று முன்னேறுவது, மீண்டும்மீண்டும் முன்னேறுவது. இதனைத் தேசமாக, உருக்குப் போன்று உறுதியுடன் சாதித்து முடிக்க உறுதி கொள்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மாபெரும் (3ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே சந்திரிகா அரசின் மீதான அச்சக்திகளின் ஆவேசமாக வெளிப்படுகின்றது. இந்த வகையில் சிங்கள தேசத்தின் ஆளுங்குழுமத்தின் பல்வேறு பிரிவினருக்கிடையிலான உள்முரண்பாடுகள் கூர்மைப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக, விமானத்தளத் தாக்குதலின் விளைவுகள் மிகப் பாரியதாகவும் தொடர்சங்கிலி போல தாக்கங்களை தந்தும் கூட, சிங்கள சமூகத்திடமிருந்து நேரடியாக குறிப்பிடத்தக்க அளவிற்கு பிரதிபலிப்புகள் வெளிப்பட்டதாக இல்லை. சிங்கள தேசம் கேள்விக்கிடமற்று அரசின் யுத்த முயற்சிகளை ஆதரிக்கும் நிலையில் இருந்து ஒருவித பாராமுக நிலைக்கு மாறும் அறிகுறி இதுவாகும். யுத்தத்தில் இலகுவில் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கையில் மிதந்த சிங்கள சமூகம், தொடர்ச்சியான பல தோல்விகளால் தற்போது அரசியலையும் அரசியல்வாதிகளையும் ஒருவகை தவிர்ப்புச் செய்யத் தொடங்கியதைக் காண முடிகின்றது. இவை இத்தாக்குதலினால் விளைந்த குறிப்பிடத்தக்க அரசியல் வெற்றிகளாகும்.

பயணிகள் ஏற்றப்பட்டிருந்த சர்வதேச விமான நிறுவனங்களின் விமானங்கள் புறப்படும் வரையும், இறுதியாக வந்த விமானம் தனது பயணிகளை இறக்கி விமான நிலையத்திற்குள் செல்லும்வரை காத்திருந்து தாக்குதலை ஆரம்பித்தமை, எந்தவொரு சிவிலியர்களுக்கும் பாதிப்பின்றிப் பார்த்துக் கொண்டமை, அதற்கேற்ப விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவினர் தனிவகைப்பட்டதாக ஆயுதங்கள் தரிக்கச் செய்தமை, தமதுயிரை அர்ப்பணித்த போது கூட இவ்விடயத்தில் பிரக்ஞையுடன் போராளிகள் செயற்பட்டுள்ளமை போன்றவற்றால், விடுதலைப் போராட்டத்தின் தார்மீகம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்த, நீண்டகாலமாக அனைவரும் எதிர்பார்த்திருந்த மற்றுமொரு குறிப்பிடத்தக்க அரசியல் வெற்றியாகும்.

நோர்வேயின் முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நம் தாயகத்தில் அரசு மேற்கொண்ட பாரிய விமானக் குண்டு வீச்சுக்களையிட்டு அமெரிக்க, இந்திய அரசுகள் தமது நலன்களில் இருந்து கவலை தெரிவித்திருந்தன. சிறிலங்கா அரசின் இயலாமை காரணமாக, விடுதலைப் போராட்டமும், விடுதலைப்புலிகளும் தம்மால் கட்டுப்படுத்தப்படும் நிலையைத் தாண்டி பலம்பெற்றுவிடும் என்பதே ஆதிக்க அரசுகளின் கவலைக்கு அடிப்படையாகும். இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தனர். அரசின் விமானக்குண்டு வீச்சுக்கள், சமாதானத்திற்கும் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கும் நிரந்தரமான சேதத்தை விளைவிக்கும்! எனவே, விமானத்தாக்குதலை உடன் நிறுத்தும்படியும் தவறினால் அரசு பாரிய எதிர்விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என.

அவ்வாறான பகிரங்க எச்சரிப்புக்குப் பின்னரே தாக்குதல் நடாத்தப்பட்டது. இதன் மூலமாக விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகக் காட்டும் ஆதிக்க அரசுகளின் பிரச்சாரங்கள் குறிப்பிட்டளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தாக்குலானது, எதிர்பார்த்ததையும் விட ஏராளமான வெற்றிகளையும் குவிப்பதற்கு வித்திட்ட முன்னோடி நிகழ்வுகள் பற்றிப் பின்னோக்கிப் பார்ப்போம் எனின்,

ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று என்பன, பண்பளவில் தாயகப் பிரதேசங்களை ஒன்றன்பின் ஒன்றாக மீட்பதாயும், கெரில்லாப் போர் முறையில் இருந்து மரபுப் போர் முறை நோக்கிய திடமான வளர்ச்சிக் கால கட்டங்களாயும் எல்லைப்படைகள், துணைப் படைகள் என மக்களைப் படையாக்கம் செய்தல் என்ற புதிய கருத்தாக்கங்கள் வடிவங்கள் - இதில் சர்ச்சைக்குரிய விடயங்கள் இருக்கின்ற போதிலும் - அறிமுகப்படுத்தப்படுவதாயும் அமைந்தன. ஓயாத அலை மூன்றின் இறுதிக் கட்டமாக ஆனையிறவில் அரச படைகளின் முள்ளந்தண்டு முறிக்கப்பட்டது.

அடுத்து விடுதலைப்புலிகளின் படையணிகள், யாழ் நோக்கிய நகர்வும், பின் பலாலி படைமுகாமுக்கும் விமானப் படைத்தளத்திற்கும் கெடு வைத்துச் செயற்பட்ட நிகழ்வுகளும். சமகாலத்தில் இந்திய அரசு உள்ளிட்ட சர்வதேச ஆதிக்க அரசுகளின் தலையீடுகள். இறுதியாக, விட்டோடத் தயாராக இருந்த சிறிலங்கா அரச படையினர் பாரிய யுத்த தளவாடங்கள் கொண்டு பலப்படுத்தப்பட்டதாலும் ஆதிக்க சக்திகளின் நிலைப்பாடுகள் காரணமாகவும் வேகப்பாய்ச்சலானது ஒரு தற்காலிக மட்டுப்படுத்தல் கண்டது. இவற்றினூடாக, நமது தேசியவிடுதலைப் போராட்டமானது குறிப்பிடத்தக்க அரசியல், இராணுவப் பண்பு மாற்றதின் குறிப்பிட்ட கட்டத்தை எட்டியிருந்தது.

அதன் பின்னர் ஓயாத அலை நான்கு பிரகடனப்படுத்தப்பட்டது. உண்மையில் இந்த ஓயாத அலை நான்கு ஏனைய ஓயாத அலைகளில் இருந்து வேறுபட்டும் சிக்கலானதாகவும் முன்னும் பின்னும் அலைவது போன்ற தோற்றப்பாட்டுடன் வெளிப்பட்டது. ஆனாலும், ஒரு திட்டவட்ட அரசியல், இராஜதந்திர மற்றும் இராணுவ பண்புகளுடன் முன்னோக்கி மெதுவே பாய்ச்சலுறுவதாகவும் அமைந்தது.

ஆனையிறவு முகாமை வீழ்த்தி எய்தப்பட்ட முன்னேற்றங்களுடன், சிறிலங்கா அரசுடனான நேரடி யுத்தம் அடிப்படையில் முடிவிற்கு வருகின்றது. சிங்களப் படைகளின் முன்னேறித் தாக்கும் பண்பும் முடிவிற்கு வந்து விட்டிருந்தது. இதனைச் சரியாகவே கணிப்பிட்டுக் கொண்ட ஏகாதிபத்திய மற்றும் இந்திய அரசுகள் எமக்கும் சிங்கள அரசுக்கும் குறுக்கே வந்து நின்றன. இப்புதிய கட்டம் விடுதலைப் போராட்டத்தின் போக்கு இந்த ஆபத்தான எதிரிகளை முறியடிக்கும் திசையில் மாற்றம் காணப்பட வேண்டியிருந்தது. இவ்வகையில், இறுதிக்கட்டப் போராட்டத்தின் பண்பானது ஒரேசமயத்தில் பல பரிமாணங்களைக் கொண்டதாக மாற்றம் காண்கின்றது. அவற்றை பின்வருமாறு நாம் தொகுக்கலாம்.

யாழ் குடா நாடானது, ஒரு வில்வளைவு முற்றுகைக்குள் வைக்கப்படுகின்றது. அரசியல், இராஜதந்திர முக்கியத்துவம் மிக்க சொல்ஹெய்ம்-பிரபாகரன் சந்திப்பு நடைபெறுகின்றது. அரசின் இராஜதந்திர முகத்திரை கிழித்தெறியப்படுதவற்கான முக்கிய புள்ளியாக, சமாதானப் பேச்சுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டு அரசு அதற்குள் சிக்க வைக்கப்படுகின்றது. சமாதான நகர்வுகளில் நமது தரப்பின் முன்கையெடுப்புக்களால் அரசு மோசமாக அம்பலப்படுத்தப்படுகின்றது. சமகாலத்தில் தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுதல். அரச படைகள் வெளிப்படையாகவே நமது மக்களை போர்க் கேடயங்களாக பாவிக்க முயன்றமையும் அதற்கெதிரான போராட்டங்களும். மனிதவுரிமை மீறல்களுக்கு எதிராக பல முனைகளில் மக்களின் போராட்டங்களும் அமைப்பாக்கமும். குறிப்பாக மாணவர்களின் போராட்டங்கள் வளர்ச்சி பெற்று, பொங்குதமிழ் வடிவம் பெற்று அது இன்னும் பல வடிவங்களிலும் பல தளங்களிலும் தொடர்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. விடுதலைப் போராட்டத்தின் பால் செயற்பாடற்ற ஆதரவு நிலையில் இருந்து வந்த மக்களின் நிலை படிப்படியாக மாறி மக்கள் திரள்திரளாக முனைப்பாகச் செயற்படும் நிலையை வந்தடைந்தமை. மேற்படி பல்வேறு மாற்றங்கள் விடுதலைப் போராட்டதில் நீண்ட காலத்தின் பின்பு ஏற்பட்டுள்ள குணாம்ச மாற்றங்களாகும்.

இதன் காரணமாக, தமிழ்ப் பொது மக்களையே பயங்கரவாதிகளாக சித்தரிக்கும் வங்குரோத்து நிலைக்கு அரசும் படையினரும் அடைதலும், அதற்கெதிராக தொடர்ந்தும் தமிழ் தேசத்தின் பல்வேறு அரசியல், சமூகசக்திகளும் தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்து அணிதிரள்தலும். இவற்றினூடாக, விடுதலைப் போராட்டத்தின் தார்மீக பண்பும் பலமும் சர்வதேச ரீதியில் அதிகரிக்கின்றது.

விடுதலைப் புலிகளின் போர்த்திறனும், அரச படைகளின் இயலாமையும் அக்கினிச்சுவாலை முறியடிப்புடன் மீளவும் ஒருமுறை திட்டவட்டமாக நிருபிக்கப்படுகின்றது. அரச படைகள் முன்னேறித் தாக்குதல் நிலைக்கு அடுத்து வரும் ஓரிரு வருடங்களுக்குச் செல்லமுடியா நிலைக்குத் பின்தள்ளப்படுகின்றது. சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் நேர்மையாக நடந்து கொண்டு, பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகத்திற்கு நிருபிக்கப்பட்டது. அதற்கான பல விலைகளை தேசமும் விடுதலைப் புலிகளும் கொடுத்ததன் பின்புலத்தில் அது மேலும் வலிமையுறுகின்றது. விடுதலைப் புலிகளையும் விடுதலைப் போராட்டத்தையும்

(தொடர்ச்சி 11 ல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# PLFP தலைவருக்கு புரட்சிகர அஞ்சலி

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உறுப்பின அமைப்பான பலஸ்தீன விடுதலை மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அபு அலி முஸ்தபா ( 65) சியோனிச அரசினால் 27-08-2001 அன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளர் ஜோர்ஜ் ஹபாசுக்குப் பின்பு இப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட முஸ்தபா அவர்கள் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவராகும். இவ்வமைப்பானது தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புகளுடன் சர்வதேச ஒருமைப்பாட்டின் அடிப்படையில் நீண்டகாலமாக நெருக்கமாக இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.




ஒஸ்லோவில் கையெழுத்தான இஸ்ரேலிய - பலஸ்தீன சமாதான ஒப்பந்தமானது பலஸ்தீன மக்களின் இறைமையை சியோனிச, அமெரிக்க அரசுகளின் நலன்களுக்கு ஏற்புடையதாக உருவாக்கப்பட்டதை கண்டித்து அதனை எதிர்த்து நின்ற அமைப்புகளில் இவ்வமைப்பும் ஒன்றாகும். இன்று அவ்வெதிர்வு கூறல் நிதர்சனமாகி மீண்டும் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் அரசியல், இராணுவ தளங்களில் எழுச்சி பெற்றுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் வெகுசன கிளர்ச்சிகளை ஒழுங்கமைத்து நடாத்தி வரும் பலஸ்தீன அரசியல் தலைவர்களை தீர்த்துக்கட்டுவதை சியோனிச அரசு நிகழ்ச்சிநிரலாக்கியுள்ளது.

சியோனிச அரசுடன் நெருக்கமான உறவைப் பேணும் சிறிலங்கா அரசும் இதேவழிமுறையில், தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் அரசியல் தலைவர்கள், மாணவர் தலைவர்கள் மற்றும் மக்களுக்கு ஆதரவாக செயற்படும் ஊடகவியலாளர்களை வேட்டையாடி வருவதும் ஒப்பு நோக்கத்தக்கது.

மிகவும் முக்கியமான காலகட்டத்தில் தமது மூத்த அரசியல் தலைவர் ஒருவரை இழந்து நிற்கும் பலஸ்தீன மக்களுக்கு அவ்வமைப்பிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் புரட்சிகர ஒருமைப்பாட்டினையும் தமிழீழ மக்களின் சார்பிலும், தமிழீழ மக்கள் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சியோனிச அரசின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக விட்டுக்கொடாது பல தசாப்தங்களாகப் போராடி வரும் பலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் நமது கரங்கள் எப்போதும் நெருக்கமாகப் பிணைந்திருக்கும். புடம் போடப்பட்ட புரட்சியாளர் முஸ்தபாவின் இலட்சியங்கள் ஈடேறும் நாள் வெகு விரைவில் நெருங்கும்.

## தமிழக அகதி (7ம் பக்கத் தொடர்ச்சி)

மைகளை வெளிப்படுத்தாத அளவுக்கு, பார்ப்பணிய - ஆணாதிக்க ஊடகத்துறையெனும் முட்கம்பிகளால் நமது பெண்கள் வளைக்கப்பட்டுள்ளனர்.

- நமது பெண்களின் உடல் உழைப்பு அநியாயகரமான கூலிக்கு உறிஞ்சப்படுகிறது.

- அகதிவாழ்வின் சொல்லொணா வறுமையை தாங்கிக் கொண்டிருக்கும் பெண்கள் தமது குடும்பத்தின் அடிப்படை உணவுத் தேவைகளுக்காக பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது வாழ்வாதாரத்திற்கான ஒரு தொழில் முறையாகவே உருவாகியுள்ளது.

- முகாம்களில் பெண்களும் சிறுமியரும் பாலியல் அத்துமீறல் சகஜமானதாகி வருகிறது. குறிப்பாக சிறுமிகள் மீதான குடும்ப உறவுகளைச் சேர்ந்த ஆண்களின் துஷ்பிரயோகம் (incest) பரவலாக நடைபெறுகிறது. அதே போல் முகாம்களில் வாழும் சொந்த தேசத்து ஆண்களாலும் பெண்கள் துன்புறுத்தல்களை எதிர்கொள்ள நேர்கிறது.

- எதிர்கால வாழ்வை திட்டமிட்டு முன்னெடுக்க முடியாத பொருளாதார, சமூக வளங்கள் இல்லாத நிலையில் தமது வாழ்வில் அடுத்தது என்ன என்பதை தீர்மானிக்க முடியாதவர்களாக பருவ வயதிற்கு வந்த சிறுமிகளும் இளம் பெண்களும் உள்ளனர். திருமணம் எனும் பெயரில் ஒரு ஆணுடன் இணைந்து கொள்வதே பெரும்பாலும் இளம் பெண்களின் ஒரே தெரிவாக இருக்கிறது. இதனால் மிக இளம் வயதிலேயே பெண்கள் குடும்பம் எனும் வட்டத்திற்குள் கட்டுண்டு அதன் சுமைகளை தாங்க நேர்ந்துள்ளது. அதற்கப்பால் பெண்களுக்கென ஒரு உலகம் இல்லாது போகிறது.

தமிழகத்திற்கு அகதிகளாக செல்லும் நமது பெண்களின் சமூக நிலையானது பின்நோக்கியதாகவே இருக்கிறது. அந்நிய மண்ணில் அகதிவாழ்வானது பெண்களின் ஆளுமைக்கும், கௌரவத்திற்கும், விடுதலைக்கும் அடிப்படையில் எதிரானதாக உள்ளது.

பெண்களின் வாழ்வை பின்னோக்கித் தள்ளிக் கொண்டிருக்கும் அகதி வாழ்விற்கு அடிப்படைக் காரணியான தேசிய அடக்குமுறை முடிவுக்கு வருகையில்தான் பெண்கள் தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும், கௌரவமாக வாழவும், விடுதலையை வென்றுகொள்வதற்கான முதற்கதவுகள் திறக்கப்படுவதற்கான அடிப்படை சூழல் உருவாகிடும். அவ்வகையில் தேசவிடுதலையானது தவிர்க்க முடியாதவாறு தமிழீழ பெண்களான நமது விடுதலையுடன் பிணைந்த ஒன்றாக, பெண்விடுதலையுடன் பிணைந்த அடிப்படை நிபந்தனைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

குறைந்தபட்சம், கீழ்வருவனற்றை நமது அடிப்படை போராட்டக் கடமைகளில் ஒன்றாகக் கொள்வோம்.

- தமிழகத்தில் அகதிவாழ்விலுள்ள நமது பெண்களின் சமூக நிலையை உயர்த்துவதற்காக பெண்களின் நிலையிலிருந்து இந்திய அரசு தமிழீழ அகதிகளுக்கு ஐ.நா. அகதிகள் அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவோம்.

- நமது பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து அடக்குமுறை நடவடிக்கைகளுக் கெதிராகவும் தமிழக அரசு உடன் உரிய சட்ட நடவடிக்கைகளை சர்வதேச பெண்ணுரிமை விதிகளுக்கமைய மேற்கொள்வதற்கான சர்வதேச அழுத்தத்தை உருவாக்குவோம்.

அவ்வாறே, தமிழகம் செல்வதினால் எதிர்கொள்ளவரும் அடக்குமுறைகள் குறித்து தாயகத்தில் குறிப்பாக பெண்களின் மத்தியில் பெண்களின் கண்ணோட்டத்தில் இருந்து விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்வோம். இதன் மூலம் பெண்களின் சிந்தனையை மேலும் தேசத்தை நோக்கி திருப்பவும் பெண்கள் தமது உரிமைகள் சாந்தும் தேசவிடுதலை சார்ந்தும் போராடவுமான உணர்வை பரந்ததளத்தில் கட்டியெழுப்புவோம்.

◆ சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மாபெரும் (9ம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதப் பிரச்சினையாக ஆதிக்க அரசுகள் இலகுவில் காட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

சமாதானம் சார்ந்து சிறிலங்கா பூராவும் உள்ள கிறித்தவ சமூகமும் குருமார்களும், தொண்டர் நிறுவனங்களும் தொடர்ச்சியாக அரசிற்கு கொடுத்து வந்த அழுத்தங்களின் அதிகரிக்கின்றது.

இறுதியாக, அரசின் ஆட்சித்திறன் கணிசமாகச் சிதைக்கப்பட்டு, அது தனக்குள்ளும், ஆளுங்குழுமத்துக்குள்ளும் முரண்பாட்டைத் தோற்றுவித்திருந்தது. மேலும், அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான ஜனநாயக உரிமைப் போராட்டமாக நெருக்கடிகள் உக்கிரம் பெறத் தொடங்கியிருந்தது. அரச வெறுப்பு அல்லது சந்திரிகா ஆட்சியின் மீதான வெறுப்பானது சிறிலங்காவில் திரட்சியுற்று வந்தது.

இவ்வாறு உள்ளும் வெளியிலுமாக மிகவும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட, ஏற்பட்ட ஒரு சாதகமான நிலைமையின் பொருத்தமான பின்புலத்தில் தான், ஆடி 24 தாக்குதல் நடைபெறுகின்றது. தாக்குதல் நடந்த விதமும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட விமானத் தளம் அமைந்திருந்த இடமும் இங்கு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும், இத்தாக்குதலின் உடனடி மற்றும் நீண்டகால விளைவுகள் அரசுக்கு ஏற்படுத்தியுள்ள சங்கிலித் தொடரான பாதிப்புகள் குறிப்பிடத்தக்க புதியவகை நெருக்குதல்களை இராணுவ, அரசியல், மற்றும் பொருளாதாரத் தளங்களில் இதுவரையில்லாத அளவிற்கு தீவிரப்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் ஆனையிறவு முகாம் மீதான வெற்றியானது இராணுவத்தின் தாக்குதல் திறன் மற்றும் மனவலிமைகளைச் சிதைத்தது எனின், விமானப் படைத்தளத் தாக்குதலானது அரசு இயந்திரத்தின் இதயத்தைத் தாக்கி நாடி நரம்புகளை சிதைத்துள்ளது. காரணம், இத் தாக்குதலின் விளைவுகள் படிப்படியாகவும் சங்கிலித் தொடர்ச்சியாகவும் பல்வேறு தளங்களிலும் ஏற்படுவதாகும். ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகும். அரசு இதிலிருந்து என்றைன்றைக்கும் மீள முடியாததாகும். ஆனையிறவின் விளைவுகளில் விடவும் மாபெரும் வரலாற்றுச் சாதனையாகிய விமானத்தளத் தாக்குதலானது, அடிப்படையிலும் பண்பு ரீதியிலும் இவ்வாறாக மேம்பட்டும் வேறுபட்டும் நிற்கின்றது. நம் தேசத்தின் ஒவ்வொரு பிரஜையும் வீறு கொண்டு முன் சென்று நம் தமிழீழ இலக்கினை அடைவதற்கு தம்மால் முடிந்த ஒவ்வொரு பங்களிப்பையும் வழங்குமாறு திடவுறுதி கொள்ளச் செய்வதுமாகும்.

இதற்கு மேல் விடுதலைப் போராட்டத்தை எந்தவொரு சக்தியும் குறைத்து மதிப்பிட முடியாது. அப்படி செய்பவர்கள் தம்மையே கேலிக்குரியவர்களாகிக் கொள்வர். நேரடி இழப்பு ஒரு பில்லியன் அமெ.டொலர் என அரசு ஒப்புக் கொண்டிருந்தாலும், இழப்பின் முழுப் பரிமாணமும் பன்மடங்கானது, மீளவும் சரிப்படுத்த முடியாதது. இத்தாக்குதலும் அதன் வெற்றியும் அதன் தொடர் விளைவுகளும் வெளிப்படையாக உரிமை கோரப்படவும், பாரியளவில் கொண்டாடப்படவும் முற்றிலும் பெறுமதி மிக்கது. அனைத்து அடக்குமுறையாளர்களுக்கும் ஒரு மறக்க முடியாத பாடமாகும். போராட்ட சக்திகளுக்கோ ஒப்பற்ற உந்துதலைத் தருவதாகும்.

ஆக சந்திரிகா நிர்வாகம் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த சிறிலங்க அரசு இயந்திரமே இன்று சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடக் கின்றது. அதற்கு இனி உயிரூட்ட எவராலும் முடியாது. இந்த முடிவுத் திசைக்கு கட்டியமிட்ட மாபெரும் வரலாற்றுச் சாதனை தான் சிறிலங்கா அரசின் விமானத் தளத்தின் மீதான தாக்குதல். அதன் பின்னான குவிக்கப்பட்ட வெற்றிகள். இதனைச் சாதித்த போராளிகள் கொண்டாடப்பட வேண்டியவர்கள். இத்திட்டமிடலில் பங்களித்த, ஒவ்வொரு சிறு ஒத்துழைப்புகளையும் வழங்கிய அனைவரும் வரலாற்றில் தனியாகக் குறித்துக்கொள்ளப்பட வேண்டியவர்கள்.

இறுதி வெற்றியினை துரிதப்படுத்துவதை நோக்கி, இவ்வெற்றித் தொகுப்பின்முழுமையானபலாபலன்களை அறுவடை செய்வதை நோக்கி, ஒவ்வொரு அடியாக திட்டமிட்டு எடுத்து வைப்பதே இப்போது நம்முன் உள்ள கடமையாகும். எதிரிகளின் எந்தவித மிரட்டல்களையும், நிபந்தனைகளையும், வார்த்தை ஜாலங்களையும் தூக்கியெறிந்து விட்டு, தமிழீழக் குடியரசு அமைப்பதை நோக்கிய அக, புறக் கடமைகளை ஒன்றிணைந்து ஆற்றுவோம்

◆ விஜி

# மக்கள் களம்

தோழர்களே!

த.ம.க இரண்டு பிரசுரங்களை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பல்கலைக்கழகம் மூடப்பட்டு மீள திறப்பதற்கு கல்வி அமைச்சால் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் குறித்த பிரசுரம். மாணவர்கள் ஏறத்தாழ இரண்டு கிழமைகளாக போராட்டம் நடத்தியிருந்தனர். இக்காலத்தில் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அதன் பின்னர் கல்வியமைச்சு இந்நிபந்தனைகளை விதித்தது. பிரசுரம் ஏறத்தாழ ஒரு கிழமையின் பின்னர் (திவ்வியன் கைது செய்யப்பட்டு போராட்டம் தொடங்கி மூன்று கிழமைகளின் பின்னர்) வெளியிட பட்டிருக்கிறது

ஆனால் புலிகளால் கட்டுநாயக்க விமான தள தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு கிழமை பூர்த்தியாவதற்குள் இவ்வெற்றி குறித்த பிரசுரம் வெளியிட பட்டிருக்கிறது. இலங்கை அரசின் யுத்த விமானங்கள் அழிக்கப்பட்ட விடயம் கொண்டாட தக்கது மட்டுமல்ல. புலிகளால் இவ்வகை தாக்குதல்கள் செய்ய முடிகிறது என்பதை நினைக்க உடம்பெல்லாம் புலகாங்கிதம் அடைகிறது.

த.ம.க கடமை என்ன?

வெகுஜன போராட்டங்கள் அரசுக்கெதிராக சந்தர்ப்பங்கள் கிடைக்கையில் அதை நழுவ விட்டு விடாமல் வெகுஜன போராட்டங்களில் இறங்கியுள்ள பிரிவினர் மட்டுமல்லாமல் போராட்டத்தில் உடனடியாக இணைந்து கொள்ள கூடியவர்கள் போராட்டம் சூடு பிடிக்கையில் இணைய கூடியவர்கள் வெற்றி கிட்டுகையில் இணைய கூடியவர்கள் என வகைப்படுத்தி பிரச்சார வேலைகளை மையப்படுத்த வேண்டும். ஆனால் த.ம.க மாணவர்களின் போராட்டம் ஏறத்தாழ பிசுபிசுத்து போகிற நேரத்தில் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் தமிழ் கட்சிகள் அறிக்கை விடுவது போல பிரசுரமொன்றை விட்டிருக்கிறது.

இப்படி கூறுவதால் புலிகளின், தமிழ் மக்களின் சிறிலங்கா ஆகாய படை மீதான வெற்றியை கொண்டாடி பிரசுரம் விடக் கூடாதென்கிறேனா? அப்படியெல்லாம் கிடையாது. வெற்றி போராளிகளையும் மக்களையும் உணர்ச்சி பொங்க வைக்க தக்கவகையில் போராட்டத்தை உந்தி தள்ளவைக்க வகையில் இராணுவ ரீதியாக மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் தங்கள் மேல் நம்பிக்கை வைத்து போராட செய்வதாக நிச்சயமாக வெளியிடபட்டே தானாக வேண்டும். ஏனெனின் இது எல்லாவற்றையும்விட 1983ல் தெற்கிலிருந்த தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டும் அடித்து விரட்டப்பட்ட அதே காலகட்டத்தில் நடந்திருக்கிறது. இவ்வெற்றி தமிழ் மக்களை வீறாப்பாக தலைநிமிர வைத்திருக்கிறது.

த.ம.க நான் குறிப்பிட்ட மேற்கண்ட இரண்டு விடயங்களையுமே செய்யதான் வேண்டும். ஆனால் த.ம.க முதவாலது விடயத்தில் அசட்டையீனமாகவும் இரண்டாவது விடயத்தில் தன்னுடைய இலக்கை முறையாக வரையறுத்து கொள்ளாமலும் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது.

இவ்வளவு கால கட்சி செயற்பாடுகளின் பின்னரும் கூட இத்தோழர்களால் இராணுவ வெற்றிகள் தரும் மயிர்க் கூச்செறிய வைக்கும் உணர்ச்சியை மட்டுமே அனுபவிக்க தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். மக்கள் போராட்டங்களால் கிடைக்கும் வெற்றிகள் கிடைக்கும் சுதந்திரம் என்பவற்றை அனுபவிக்க தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இரண்டு வகை அனுபவங்களையும் அனுபவிக்க தெரியாத வரையில் புலிகளின் பின்னால் மட்டுமே த.ம.க தோழர்களால் செல்ல முடியும்.

தோழமையுடன்

நகுலன்

லண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழீழம்

www.thamileelam.org
info@thamileelam.org

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom


## உருப்பெறும் தமிழீழம்! உருக்குலையும் சிறிலங்கா அரசு!

தமிழீழ விடுதலைப் போராட்டம் தனது நீண்ட தயாரிப்புகள், அர்ப்பணிப்புகள் ஊடாக வெற்றியைத் திடப்படுத்தி உறுதிப்படுத்தி வருகின்றது. ஆம்! நம்மை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள அரசை, போரியல், இராஜதந்திரம், பொருளாதாரம் ஆகிய அனைத்துத் தளங்களிலும் நமது தேசம் முறியடித்துவிட்டது.

நமது மண்ணில் எஞ்சியிருக்கும் எதிரிப்படைகளை துரத்தியடித்து தேச அரசை ஸ்தாபிப்பதுவே நமது அடுத்த பணியாகும். நமது தேசத்தின் ஒட்டுமொத்த சக்திகளும் அது நோக்கி குவியட்டும். பலவீனமான நிலையிலிருந்து சிறிலங்கா அரசும் அதனைத் தாங்கி நிற்கும் இந்திய, ஏகாதிபத்திய, மேற்கத்தைய சக்திகளும் நமது வெற்றியைத் திசை திருப்பிட வகுத்து வரும் எல்லா வகையான வியூகங்களையும் முறியடித்திடும், நிர்மூலம் செய்திடும் வகையில் நமது பக்க வியூகங்களை மக்களின் திரட்சியிலும் பலத்திலும் உருவாக்குவோம்.

மக்களுக்கான அரசை ஸ்தாபிக்கும் பயணத்தில், மக்களின் அடிப்படை நலன்கள் எந்தளவிற்கு உறுதிப்படுத்தப் படுகின்றனவோ, அந்தளவிற்கு விடுதலைப் போராட்டத்தை மக்கள் தமதாக உணர்வதோடு தம் தோள்களில் பிரக்ஞையுடன் தாங்கவும் முன் வந்து கொண்டிருக்கின்றனர். எதிரியை தோற்கடித்து, உறுதிப்படுத்தப்பட்ட விடுதலை எனும் அரசியல் பண்பை வந்தடைந்திருக்கும் நமது போராட்டத்தின் அகம் நோக்கின பண்புகளும் மாற்ற முற வேண்டிய வரலாற்று கட்டத்திற்கு போராட்டம் நம்மை இட்டு வந்துள்ளது.

தேசத்தின் புறம் நோக்கின (எதிரிக்கெதிரான) அரசியலில் ஏற்பட்டுவரும் முன்னேற்றகரமான மாற்றங்களுக்கு இசைவாக போராட்டத்தின் அகச்சூழல் மாற்றப்பட வேண்டியது இயங்கியல் விதி. இவ்விதியைப் புரிந்து கொண்டு, தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்தியான விடுதலைப் புலிகள் இன்னுமின்னும் முன்மாதிரியான நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். அதேபோல், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் பல்வேறு பட்ட வெகுஜன அமைப்புகளின் தலைமைகளும் மக்களின் அடிப்படை நலன்களுக்கு மதிப்பளித்து செயற்படும் வகையில் மக்களுடனான தமது உறவில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்திட வேண்டும். போராட்ட அமைப்பினால் மக்களின் உரிமைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகையில் போராட்ட அமைப்பிற்கும் மக்களுக்குமான உறவுகள் நெருக்கமாகும். போராட்டம் மக்கள் பலத்தில் உருக்கேறும்.

இனப்படுகொலை வெறியால் பீடிக்கப்பட்டு நமது சின்னஞ்சிறு தேசத்தை பூண்டோடு இல்லாதொழிக்கும் நோக்குடன், சர்வதேச நியமங்களின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருக்கும் சிங்கள அரசையும், அதற்கு இவ்வாறான மனித அழிப்பிற்கு உற்சாகமூட்டல்கள் வழங்கிவரும் சர்வதேச ஏகாதிபத்திய பயங்கரவாத அரசுகளையும் எதிர்த்து வெற்றிகொள்ள நமது தயாரிப்புகளை அரசியல், போரியல், பொருளாதாரம் எனும் அனைத்துத் தளங்களிலும் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

அம்பாறை பொலிஸ் காடையரினால் கூட்டு வன்புணர்ச்சிக் குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சகோதரி கோணேஸ்வரியின் நினைவு தினத்தன்று விடுதலை புலிகள் அம்முகாம் மீது தாக்குதல் நடாத்தியதானது, மக்களின் சார்பில் போராட்ட அமைப்பானது எதிரிகளுக்கு தண்டனையளிக்கும் ஒரு நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது. போராட்டத்தை மக்கள் நலன் சார்ந்து வளர்த்தெடுப்பதில் புலிகளிடம் உருவாகிவரும் இப்பண்பு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

## இந்திய அரசின் கொள்கையில் மாற்றமா?

விமானத் தளத் தாக்குதலை இந்திய அரசு கண்டனம் செய்யாது, கவலை தெரிவித்துள்ளது. இதையிட்டு சிறிலங்கா அரசு அதிர்ச்சியடைந்துள்ளது. ஆக, அண்மைக்காலமாக இந்திய அரசு நமது பிரச்சனை தொடர்பாக கரிசனை கொண்டு வருகின்றது போலவும், அந்தவகையில் தற்போது இந்தியாவின் கொள்கையில் தற்போது நமக்குச் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது போலவும் இந்த வகையில் அமெரிக்க அரசிலிருந்து இந்திய அரசு மாறுபட்டது போலவும் செய்திகள் திட்டமிட்டு பரப்பப்பட்டுள்ளது. இதற்குப் பின்புலமாக இந்திய அதிகாரத்துவப் பிரிவினரும் அதற்கு உறுதுணையாக சில தமிழ்த் தரப்புகளும் செயற்படுகின்றன.

தமிழீழத்தின் இறைமையில் குறிவைத்துச் சாணக்கியத்தனங்கள் புரிவதில் அமெரிக்க அரசும் இந்திய அரசும் கைகோர்த்துச் செயற்படுவது நாமறிந்ததே. இருப்பினும் அமெரிக்க அரசு மேற்படி தாக்குதலைக் கண்டித்து அறிக்கை வெளியிட, இந்திய அரசு கவலை மாத்திரம் தெரிவித்ததன் பின்னணி வேறு என்னவாக இருக்க முடியும்? என்ற வினாவில் இருந்துதான் இந்த கருத்து மாயைக்கு முக்கியத்துவம் பிறக்கின்றது.

நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை கூடியிருந்து கெடுக்கும் இந்திய அரசின் வழிமுறைகள் அவமானகரமாக முறியடிக்கப்பட்டதற்குப் பின்பு, நேரடியாகவே சிறிலங்கா அரசிற்கு அரசியல், இராணுவ, பொருளாதார வழிமுறைகளில் அனைத்து ஒத்துழைப்புகளையும் செய்து வந்தது. பங்குச்சந்தைகளில் முதலிட்டது. தேயிலைத் தோட்டங்களில் முதலிட்டது. வர்த்த ஒப்பந்தங்கள் பலவற்றை தனக்குச் சாதமாகச் செய்து கொண்டது. யுத்த தளபதிகளுக்குப் பயிற்சி கொடுத்தது. மலிமான விலைகளில் யுத்த தளவாடங்களும் படையினருக்கான பொருட்களையும் விற்பனை செய்தது. விமானங்களையும், கடற்படைக் கப்பல்களையும் கொடுத்தது. அவற்றைப் பெறுவதற்கு கோடிக்கணக்கில் கடனுதவி செய்தது. கடற்பரப்பில் கடுமையான கண்காணிப்புகள் செய்தது. விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க அவசியமான உளவுத்தகவல்களை பரிமாறிக் கொண்டது. சிறிலங்கா அரசுக்கு அவசியமானவர்களை நாடுகடத்தியது. இப்படி அடுக்கிக் கொண்டு போகலாம்.

இருந்தும் என்ன? இந்திய அரசின் இந்த அனைத்து முயற்சிகளும் படுதோல்வி கண்டது. விடுதலைப் போராட்டம் அதன் வெற்றித் திசையில் பிரவாகித்துக் கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் இராணுவ, அரசியல், இராஜதந்திரத் திறன் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் அதிகரித்து வருகின்றது. தமிழீழம் சாத்தியமாவதை எவருமே தடுத்துநிறுத்த முடியாத நிலைமை நெருங்கி வருகின்றது. அந்தளவிற்கு சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு அத்தியாயம் முடிவடைகின்றது. இந்த யதார்த்தத்தை இப்போதுதான் இந்திய அரசு ஓரளவிற்குச் சரியாக கணித்துள்ளது.

எனவே இந்திய அரசு வழமையான தனது நீண்டகால நோக்கை அடைவதற்கு புதிய வழியை பரீட்சித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

தேசங்களின் சிறைக் கூடமாக உள்ள இந்தியாவின் நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் குட்டி அமெரிக்காவாக இந்திய அரசு நடந்து கொள்வதைக் கைவிட வேண்டும். இந்தியாவின் ஆட்சிக்குழுமமாக இருக்கும் தரகுமுதலாளித்துவ சக்திகள் அகற்றப்பட வேண்டும். அதுவரைக்கும் தமிழீழம் தொடர்பான இந்திய மத்திய அரசின் கொள்கையில் எந்தவித மாற்றமும் இருக்கப் போவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்